50

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:
வேளாளர் தெரு
புரசைபாக்கம் சென்னை.

3 - OCT 1931

Vol 4] 1931ஆம் ஆகஸ்டு மீ 13உ [No. 32.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 621
2. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம்-81—90)
K. இராமரத்நம் ஐயர் B.A. 623
3. நவராத்திரி — ஓர் நாடகம்.
K. N. சுந்தரேசன் B. A. (Hons) 625
4. ஊழ்வினையும் ஆள்வினையும்.
K. நாராயண ரெட்டிகாரு 627
5. ஆண்டாள்—(பிறப்பும் இளமையும்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 628
6. யாப்பிலக்கணம்
(நேரிசை - இன்னிசை வெண்பா) 631
7. மானதசாத்திரம் (உணர்வு)
T. P. மீனாக்ஷிசுந்தரம் M.A. B.L. 634
8. கலைமகளந்தாதி—K. வெங்கடசாமி ரெட்டியார் 635
9. வர்த்தமானம். 639

கலாநிலயம்

188930

நீட்டி யளப்பதோர் கோல்.

வயிற்றிற்கு வேண்டிய வருவாய் கிடைக்காத வறுமையால் உலகம் இன்று மிக நலிந்திருக்கின்றது. உயர்தர உத்தியோகத்தில் அமர்ந்துள ஒருசிலர் தவிர ஏனையோர் எண்ணிறந்தோர், நாளைகிடக்க, இன்றைக்கு என்செய்வோம் என்று எங்கெங்கும் ஏங்குகின்றனர். "வேலை வேலை, எனக்கோர் வேலை வேண்டும்" என்று அலைவார் தொகை, கைத்தொழிலாளர் முதல் கற்றதொழில் வல்லார் வரை, நாளுக்குநாள் அதிகமாகி வருதலால், இக்கொடுமை முடியுமாறு எவ்வாறு என்று இரக்கமுடன் எண்ணுவார் நெஞ்சம் நடுங்கும். வருவாயில்லா வருத்தத்தைத் தாங்காமல் தற்கொலைபுரிந்து தீர்வார் சிற்சிலர். சாகாவிடத்தும் சாகைக்கே நிகரானவோர் இருள் எண்ணிறந்த அகங்களில் தூங்குகின்றது. சிரிப்புமறந்த முகஞ் சோர, ஒரில்லின்கண்ணே, தாயினை மகனைத் தம்பியை மனைவியை, வந்த விருந்தினரை, எதிர்நோக்க நாணினராய்த் தம்மையே தம் மனத்தினோடு தின்று தீர்வார்போல் மெலிவாரோ பற்பலர். கடன் இனிக் கொடுப்பாருமில்லை, கொடுத்தகடன் திரும்புமாறுமில்லை. வயல் விளைத்தும் தொழில் செய்தும் வணிகத்தும் வாழ்ந்தோரை எல்லாம் ஏழ்மையே சூழ்ந்துகொண்டிருக்கின்றது. கிளைஞரைத் தாங்கியிருந்த சிற்சிலரும் இப்பொழுது களைத்துப்போயினர். முன்னையோர் ஈட்டிய பொருளையேனும் இழக்காமல் வைத்துக்கொண்டிருக்கின்ற சிற்சிலரும், உயர்தர உத்தியோகத்திலமர்ந்துள சிற்சிலருந்தான், அவரவர்க்குரிய வேறுவகைத் துன்பங்கள் தனித்தனி எவையேனும், தற்காலம் பசிப்புலியால் நலியாதவரா யிருக்கக்கூடியவ ராகின்றனர்.

உலகம் இன்று இந்நிலை உற்றதன் நெருங்கிய காரணத்தை நாமிங்கு ஆயப்புகவில்லை. தனநூல் நிபுணர்களும் அரசியல்வாதிகளும் தம்முள் பற்பலகாரணங்கள் பகிர்ந்து கூறுவார். அயல்நாடுகளின் கதியும் பெரும்பாலும் இப்படியே இருத்தலால், அயல் ஆட்சியால் இவ் விந்தியநாடு இவ்வண்ணம் அவலமாயிற்றென்று இயம்புதல் பொருத்தமுடையதன்று. நெருங்கிய காரணம் எதுவேனும், இத்துணைக்கும் பொதுவாய் நிற்கின்ற தூரகாரணம் ஒன்றேதான். ஆங்கிலத்தில் Life என்றும் Living என்றும் இரண்டு சொற்கள் உள. முன்னது உயிர்நிலையையும் பின்னது உடல்நசையையும் குறிக்கும். மனிதத் தொகுதி உயிர்நிலைக் குரிய நோக்கங்களை உயர்த்துதற்கு முயலும்வரையில் தீதிலாப் பெருவாழ்க்கை எவ்வெவர்க்கும் எய்தியதேயல்லாது, உடல்நசைக்குரிய போகங்களை உயர்த்துவதே உயிர்வாழ்க்கை என்ற அவலக் கொள்கையில் உழலத் தலைப்பட்டஅன்றே வறுமை முதல் எல்லாத்துன்பங்களையும் வருந்தியழைத்துக் கட்டியழக் கைநீட்டி விட்டதென்பதற்கு ஐயமோ சற்றேனு மில்லை. உயிர்நிலையை உயர்த்த வேண்டுமென்பது (raising the standard of life) முன்னோர் காலத்தில் பெரியோர் கற்பித்த நல்லுரையும் நன்னெறியுமா யிருந்தது. இன்றைக்கோ, மற்றெல்லாவற்றையும்போல் இத் தூயநோக்கமும் இழிந்திழிந்து, உடல்நசைக்குரிய போகங்களைப் பெருக்குதலே (raising the standard of living) முன்னேறும் மாந்தருக்குரிய கடன் என்னும் பேச்சாய் எங்கும் முடிந்தது. சிறுகக்கட்டிப் பெருகவாழ்தல்

32
2H, A178K N
1-4-32

என்னுந்தூய்மையை நம் முன்னோர் நன்கு உணர்ந்திருந்தனர். சிறியவாழ்க்கைக்குப் பெருக்கட்ட முயன்று அதுவும் முடியாமல் இருந்தகூரையும் இடிந்து வீழ்வதே இக்காலச் சரித்திரமாய்த் தீர்கின்றது. பாவம் பெரிதுடைத்து இப் பேதையுலகம்.

மேனாடுகளிற் சிறிதுகாலம் சுற்றிவிட்டு வந்தவர்கள் உடனே இவ் வேழைஇந்தியர்கள் உய்வதற்குரியவழி இதுஇது வென உரைக்கத் தலைப்படுகின்றனர். தாம் சொல்வது இன்னதென்று பெரும்பாலுந் தமக்கே தெரியாதேனும், அவர் வற்புறுத்துங் கொள்கையை ஒருவாறு ஊகிக்கலாம். "உங்கள் வாழ்க்கைத்திட்டத்தை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும். இன்னும்பெரிய வீட்டில் நீங்கள் வசிக்கவும், உயர்ந்தஉடைகளை அணியவும் மிகுந்த உணவு உண்ணவும், மாலைதோறும் 'ஸினிமா' முதலிய காட்சிகளுக்குப்போகவும் நீங்கள் கூடியவர்களாதல் வேண்டும். இதனால் செலவுமிகும். இச்செலவிற்கு வேண்டிய பணம் ஈட்டுதற்கு முயல்வீர். அம்முயற்சியால் நாட்டின் கைத்தொழில் வர்த்தகம் முதலியன வளர்ச்சிபெறும். அப்பொழுது நம்தேயத்தின் செல்வநிலை மிக உயர்ந்துமுன்னேற்ற மடைந்துள்ள மற்றநாடுகளுக்குச் சமமான நற்கதி நாமும் அடைந்தவராவோம். இங்கிலாந்தில் ஆளுக்குச் சராசரி செலவு அவ்வளவு; ஆதலால் வருவாயும் அவ்வளவே; நம்மவர்க்கோ செலவு சிறிது. ஆதலின் வருவாயும் சிறியதே" எனப் பரிவுடன் வருந்தியுரைக்கின்றார் இவர். வாழ்க்கைத் திடத்தை (Standard of living) உயர்த்துவது என்பதன் கருத்துங் கருமமும் இதுதான். இதுவா வாழ்க்கை! நோக்கம் இதுவாயின் அலலலே யல்லாமல் வேறென் விளையும். வாழ்க்கைத் திட்டத்தை இவ்வகையில் விரைவுடன் உயர்த்திவந்த இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளின் அவலச்செய்தியே இன்னார் வாயை அடைத்துப் பூட்டிடற்கேற்ற விடை. விளம்பி நிற்கின்றனவே. ஏனவை அவ்வாறாயின வென்பதற்குக் காரணந்தான் நெடுந்தூரந் தேடவேண்டா. உடலுறு போகத்தையே வாழ்க்கையென உழன்றதால், அவ்வாழ்க்கையின் உயிர்நிலை வளர்ப்பாரின்றித் தேய்ந்துபோகின்றது. "நாங்கள் வாழ்கின்றோம் அல்லோம், நாடோறும் சிறிதுசிறிதாகச் செத்துக்கொண்டே வருகின்றோம். ஐயகோ, இப்படியே யாம் பிணக்கோலமாய்ப் போகவோ!" என்று மாத்யூ ஆர்னல்ட் அனைய மெய்யறி புலமையோர் அவ்விடத்தே அழுகின்ற கண்ணீர்க்கோ அளவில்லை. வாழ்வின் உயிர்நிலை அன்பு. உயிர்நிலையை உயர்த்துவதாயின் (Raising the standard of life) அவ்வன்பு வளர்வதற்குரிய வழியை நாடல் வேண்டும். போக வாழ்க்கையின் திட்டத்தை உயர்த்துங் கொள்கையோ ஆழ்ந்து நோக்குங்கால அன்புநெறிக்கு மாறாகவே முடியும். அவ்வாறுதான் முடிந்தது. வாழ்க்கைக்கே வேறுநோக்கம் இல்லாமற் போய்விடும். அவ்வாறு போயதெனின் ஊழித்தீயால் உலகடங்கலும் ஒழிவதன்றி உய்யும்நா ளில்லை. இவ்வுண்மையை அறியும் ஆற்றலில்லாதார்மனத்தை வாழ்க்கைத்திடத்தை உயர்த்துவதென்னுஞ் சொற்றொடர் கதுவிக்கொள்கின்றது. அதற்கே அவர் அடிமையாகின்றனர். அடிமையாயபின், வாழ்க்கைக்குரிய உயரிய நோக்கங்களைச் சொன்னாலும் அவர்களுக்குத் தெரிந்துகொள்ள இயல்வதில்லை. சில சொற்களும் தம் சீரியபொருளை அவர் வரையில் இழந்துவிடுகின்றன. அரசியல் கட்சியொன்றின் தலைவர் என்னும் இனத்தைச் சேர்ந்த ஒருவர், சில ஆண்டுகளுக்குமுன் இங்கிலாந்து சென்று மீண்டு சென்னைத் தொழிலாளர் சங்கமொன்றில் பிரசங்கம் செய்யலாயினர். தாய்ப்பாஷையில் பேசும் பயிற்சியின்மையால் அவர் ஆங்கிலத்தில் சொல்வதும் அதனை வேறொருவர் வாக்கியம் வாக்கியமாகத் தமிழில் மொழிபெயர்த்துக் கூறுவதுமாய்ப் பிரசங்கம் நடைபெறுகையில், "in England the labouring classes are living decently' என்றியம்பியதை மொழிபெயர்ப்பாளர் இங்கிலாந்தில் தொழிலாளர் ஒழுங்காகவும் கவுரவமாகவும் வாழ்கின்றனர், என்று தமிழிற் கூறினர். பிரசங்கியாருக்கு இது ஒவ்வவில்லை. உடனே அவர்" "decency is not ஒழுங்கு and கவுரவம்" என மறுத்துவிட்டார். மறுத்துவிட்டுத் தன்முறையிலே, decency என்பதற்கு, வேளைக்குத் தகுந்த உடைபணிதல், வீட்டில் பீங்கான் பாத்திரங்கள் இருத்தல்போன்ற பல விடயங்களைப் பொருளாக்கினர். அவரை நொந்து ஆவதென்!

வறுமையோ வந்துற்றது. இக்கேட்டினும் உண்டோருறுதி; ஏனெனில் கிளைஞரை நீட்டி யளப்பதோர் கோல் அதனிற் சிறந்தது வேறொன்றில்லை. உடல் பொருள் ஆவியெல்லாம் ஏழை இந்தியாவிற்காக அற்பணஞ் செய்துவிட்டோம் என்று விளம்புவார் ஒருபுறமிருக்க, "விளம்பியொன்றுஞ் செய்யாவிடினும்எம் சிந்தையும் அன்னதே" என்று எண்ணிக்கொண்டிருப்பவரெல்லாம் யாவதாயினர். உத்தியோகங்களிலும், வக்கீல் வைத்தியம் முதலிய தொழில்களிலும் நெடிதுகாலம் இருந்து மூன்றுதலைமுறைக்குப் போதிய அளவு பொருள் சேர்த்துக்கொண்டிருப்பவர் அவ்வுத்தியோகங்களிலிருந்தும் தொழில்களிலிருந்தும் விலகிக்கொள்வாராயின் வேலையில்லாது இப்போது தவிப்பவர் பலருக்கு ஓர் வழிவாய்க்குமே. தந்தை ஈட்டிவைத்த பொருளெல்லாம் இருந்தும் உத்தியோகத்தைக் கைப்பற்றிக்கொள்வார் எத்தனையோபலர். இன்னோரன்னவர் ஒவ்வொருவரும் ஒவ்வோர் ஏழையைத் தற்கொலைக்குத் தூண்டுகின்றவராவார். பணமும் நிலமும் மிகவுடைய செல்வவந்தர்கள் இங்கு இல்லாமலில்லை. அவர்களுக்கு மாதம் முப்பது நாற்பது ரூபாய் அதிகச்செலவு ஒரு பொருளன்று. அன்னவர் ஒவ்வொருவரும் வீட்டிற்கு இரண்டுவேலைக்காரரை அதிகமாய் வைத்துக்கொண்டால் வேறுவழியற்ற எத்தனையோ ஏழைகள் பிழைத்துப்போவார். இருபது முப்பது வேலிக்குமேல் நிலமுடையவர் ஒவ்வொருவரும் கல்வி முற்றியும் வேலையற்று வாடுகின்றவர்களில் ஒருவருக்கு ஒருவேலி நிலம்கொடுத்தால் எண்ணிறந்தோர் இடுக்கண் தீர்வார்களே. இதுவுமன்றி, மாதமொன்றிற்கு ஆயிரக்கணக்கில் வருவாயுடையவர்களாய் இருப்பவர் அனைவரும், தம் உறவினர்க்குள்ளேயே வேலையின்றி வருந்துவோரை உணவும் உடையுங் கொடுத்துக் காப்பராயின், வேலையில்லா வறுமையின் ஒரு பகுதி குறையுமே. "யார் எக்கேடு கெட்டால், எனக்கென்ன! என் பொருளை நானவனுக்குக் கொடுப்பானேன்" என்பவரைப்பற்றி யாமிங்கு ஒன்றும் உரைக்கவில்லை. மற்ற, இந்தியரது வறுமைநிலை தீரவேண்டுமென்று பற்பல சீர்திருத்தங்களிலும் அரசியல்வாதங்களிலும் கட்சிப் பேச்சிலும் ஈடுபட்டு, "தொண்டுகள்" ஆற்றுகின்றதாய் விளம்பரம் செய்கின்ற கிளைஞரைத்தான் நாம் இப்பொழுது அளக்கச் சொல்கின்றோம். நீட்டி நீட்டியளந்தாலும் அக்கோலிற்கு எட்டுவாரைக் காணலரிதென்பதை இயம்பவும் வேண்டுமோ. அது அவர் பிழையுமன்று. கற்பித்த பாடத்தின்படி வாழ்க்கைவகையை உயர்த்திக்கொண்டவர் அவர். அன்னவர்க்கு எத்தனைபணம் இருப்பினும் தம்முடைய செலவிற்கே போதுமெனத் தோன்றாது; கொடுக்கக் கற்றவனுக்குக் கையில் ஒருகாசு இருப்பினும்போதும். துய்க்கக் கற்றவனுக்கோ கோடியிருப்பினும் குறைவொழிய நிறைவில்லை. ஆதலின் அன்னவரைப் போலிக்கிளைஞர் என்று ஏசுவதுந் தகாது. உயிர்நிலையை உடலின் நசையோடு மயங்கிவழங்கும் சொற்றொடரின் ஆரவாரத்தால் இ[illegible] வொரு விபரீத மன்றோ [illegible]

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[610-வதுபக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்

வேறு.

318. கேடிலிம் மலையின் மேலாற்
கின்னர கீத மாளும்
தேடிலங் குருவத் தொங்கற்
சுடர்முடி யரசன் செம்மல்
பாடல்வண் டிமிருங் பைந்தார்ப்
பவனஞ்ச னென்ப பாரித்
தாடலம் புரவி வல்ல
வரசிளங் குமர னென்றான். 81.

கேடு இல் மலையின் மேலான் - குற்றமற்ற இந்த மலையின்மேல், கின்னர கீதம் ஆளும் - கின்னர கீதமென்னும் நகரத்தை அரசாளும், தோடு இலங்கு உருவ தொங்கல் சுடர்முடி அரசன் செம்மல் - பூவால் விளங்கும் அழகிய மாலையையும் பிரகாசிக்கின்ற கிரீடத்தையும் அணிந்த அரசனுடைய மகனாகிய, வண்டு பாடல் இமிரும் பைந்தார் பவனஞ்சன் - வண்டுகள் இசைப்பாட்டைப் பாடும் பசுமையான பூமாலையை அணிந்த பவனஞ்சன், பாரித்த ஆடல் அம்புரவி வல்ல- பரந்த வெற்றிபொருந்திய அழகிய குதிரையைநடத்த வல்ல, அரசு இளங்குமரன் என்ப என்றான் - அரசிளங்குமரன் என்று சொல்லுவார்கள் என்று சொன்னான்

உருவம் - அழகு, பாரித்த ஆடல் - பாரித்தாடல் (செய்யுள் விகாரம்). செம்மலாகிய பவனஞ்சனை அரசிளங்குமரன் என்ப, எனக் கூட்டுக.

---

319. அளந்தறி வரிய செய்கை
யமிழ்தமா பதியை யாளும்
வளந்தரு வைரப் பைம்பூண்
மன்னவன் சிறுவன் வண்டார்
விளங்கொளி யுருவத் திண்டோள்
வேகமா ரதனை யன்றே
இளங்களி யுழுவை யாக
இருநிலம் புகழ்வ தென்றான். 82.

அளந்து அறிவு அரிய செய்கை - கணக்கிடுவதற்கியலாத சிறப்புக்களுடன்கூடிய, அமிழ்தமா பதியை ஆளும் - பெரிய அமிர்தபதிநகரத்தை ஆளும், வளந்தரு வைர பைம்பூண் - விலையுயர்ந்த வைரம் பதித்த பொன்னணிகளை அணிந்த, மன்னவன் சிறுவன்-அரசன் மகனாகிய, வண்மைதார் - செழுமையான பூமாலையையும், விளங்கு ஒளி-விளங்குங் காந்தியையும் உடைய, உருவம் - அழகுவாய்ந்த, திண்மை தோள்-வலிமை வாய்ந்த தோள்களைக் கொண்ட, வேகமாரதனை-வேகரதன் என்பவனை, அன்றே - அல்லவா, இளம் களி உழுவை ஆக - இளமை வாய்ந்த களிப்புமிக்க புலியென்றே, இருநிலம்-இந்தப் பெரிய உலகம், புகழ்வது-புகழ்ந்து கொண்டாடுகின்றது, என்றான் - என்று சொன்னான்.

---

320. வேழத்தாற் பொலிந்த சோலை
மேகமா புரம தாளும்
ஆழித்தே ரரவத் தானை
அரசர்கோன் புதல்வன் அந்தார்ப்
பாழித்தோ ளுருவச் செங்கட்
பதுமத்தேர்ப் பெயரி னானை
ஊழித்தீ யென்று வேந்தர்
உட்குவ துருவத்தாரோய். 83.

உருவம்தாரோய்-அழகிய மாலையை அணிந்தவனே, வேழத்தால் பொலிந்த சோலை - யானைகளால் விளங்கும் சோலைகள் சூழ்ந்த, மேகமாபுரம் அது - மேகபுரி நகரத்தை, ஆளும்-ஆள்கின்ற, அரவம் ஆழி தேர் தானை-ஒலிக்கின்ற உருளைகள்கோத்த தேர்ப்படையை உடைய, அரசர்கோன் புதல்வன்-மன்னர் மன்னனின் புதல்வனாகிய, அம் தார் பாழிதோள் உருவம் செம்கண்-அழகிய மாலையையும் அகன்ற தோள்களையும் அழகிய செவந்த கண்களையும் உடைய, பதுமத்தேர் பெயரினானை - பத்மரதன் என்னும் பெயரைக் கொண்டவனை, ஊழிதீ என்று வேந்தர் உட்குவது-யுகாந்தகாலத்து நெருப்பென்று அரசர்கள் அஞ்சுவதாகும்.

---

321. இலங்கொளி மாட வீதி
இரத்தின புரம தாளும்
உலங்கெழு வயிரத் திண்டோள்
ஒளிமுடி யரசன் செம்மல்
அலங்கலம் புரவித் தானை
அருங்கலத் தேரின் பேரன்
குலங்கெழு குரிசில் கண்டாய்
கொண்டல்வா னுருமோ டொப்பான். 84.

இலங்கு ஒளி மாடம் வீதி - ஒளிவிளங்கும் மாடங்களை உடைய வீதியோடு கூடிய, இரத்தினபுரம் அது ஆளும் - இரத்தினபுரத்தை ஆளும், உலம்கெழு வயிரம் திண்மைதோள் ஒளிமுடி அரசன் செம்மல்-திரண்ட கல்லையொத்த வயிரத்துக்குச்சமானமான வன்மை வாய்ந்த தோள்களையும் காந்தியோடு கூடிய கிரீடத்தையும் உடைய அரசன் மகனாகிய, அலங்கல் அம் புரவி தானை - மாலையை அணிந்த அழகிய குதிரைப்படையையுடைய, அருங்கலத்தேரின் பேரன் - அருங்கலரதன் என்னும் பெயரைக் கொண்ட, குலம்கெழு குரிசில் - நற்குலத்திலுதித்த அரசிளங்குமரன், கொண்டல் வான் உரும் ஒடு ஒப்பான்-மேகத்தி லுண்டாகும் பேரிடிக்குச் சமானமானவன். (கண்டாய் - ஒரு முன்னிலை யசைச்சொல்.)

---

322. நங்கண்மால் வரையின் மேற்பால்
நன்னகர் கீத மென்னுந்
திங்கண்மால் புரிசை வேலிச்
செழுநக ரரசன் செம்மல்
அங்கண்மா ஞால மாளும்
அரிகண்ட னவனை விண்மேற்
செங்கண்மான் முனியு மேனும்
செய்வதொன் றில்லை கண்டாய். 85.

நங்கள் மால் வரையின் மேல்பால் நல்நகர்-நமது பெரிய மலைக்கு மேற்பக்கத்தில் உள்ள நல்ல நகரம், கீதம் என்னும் - கீதமென்று சொல்லப்படும், திங்கள் மால் புரிசை வேலி-சந்திரனைத்தொடும் பெரிய மதில்

கிய காவலையுடைய, செழுநகர் அரசன் செம்மல் - செழுமையான நகரத்தையாளும் அரசனுடைய மகன், அங்கண்மா ஞாலம் ஆளும் - இடமகன்ற இந்தப் பூமியை இளவரசனாக ஆளும், அரிகண்டன் - அரிகண்டன் என்பவன் ஆவன். அவனை விண்மேற் செங்கண் மால் முனியும் ஏனும் - அவனை வானுலகத்திலுள்ள செவந்த கண்களையுடைய திருமால் கோபித்தபோதிலும், செய்வது ஒன்றும் இல்லை - இயற்றக்கூடிய தீங்கு ஒன்றும் இல்லை. (கண்டாய்).

'வரையின் மேலோன்' என்ற பாடம் பொருட் சிறப்பின்மை ஓர்க.

---

323. சேந்தெரி செம்பொன் வீதித்
திரிபுர மதனை யாளும்
வாய்ந்தெரி வைரப் பைம்பூண்
மன்னவன் புதல்வன் மல்லா
டேந்துதோ ளரசர் போரே
றிவனளி தரங்க னென்பான்
காய்ந்தெரி கனலின் வெய்யோன்
கல்வியாற் கடலோ டொப்பான். 86.

சேந்து எரி - செவந்து ஒளிரும், செம்பொன் வீதி - நல்ல தங்கத்தால் விளங்கும் வீதிகளையுடைய, திரிபுரம் அதனை ஆளும் - திரிபுரநகரத்தை ஆளும், வாய்ந்து எரி வயிரம் பசுமை பூண் - அழகுவாய்ந்து பிரகாசிக்கும் வயிரங்களிழைத்த பொன்னணிகளை அணிந்த, மன்னவன் புதல்வன் - அரசன் மகன், மல் ஆடு ஏந்து தோள் அரசர் போர் ஏறு - வன்மை மிகவுந் தங்கிய உயர்ந்த தோள்களை உடைய அரசர் போரில் ஆண்சிங்கம் போன்றவனாகிய, அளிதரங்கன் என்பான் - அளிதரங்கன் என்னும் பெயரைக்கொண்டவன் ஆவான். இவன் - இவன், காய்ந்து எரி கனலின் வெய்யோன் - கொழுந்துவிட்டெரியும் நெருப்பைக் காட்டிலும் வெய்யவன்; கல்வியால் கடலோடு ஒப்பான் - தனது கல்வியின் விரிவாலும் ஆழத்தாலும் கடலுக்குச் சமானமானவன்.

மல் - வலிமை; பலம்.

---

324. செந்தளிர் புதைந்த சோலைச்
சித்திர கூட மாளும்
அந்தளி ரலங்கன் மாலை
யரசர்கோன் சிறுவ னந்தார்
இந்திரன் புதல்வ னன்ன
வேந்தலே மாங்க தற்கிம்
மந்திர வுலகின் வாழும்
மன்னர்மா றில்லை மன்னா. 87.

செம்தளிர் புதைந்த சோலை - செவந்த தளிர்களால் மூடுண்டமரங்கள் செறிந்த சோலைகளால் சூழப்பட்ட, சித்திரகூடம் ஆளும் - சித்திரகூடம் என்னும் நகரத்தை ஆளும், அம்தளிர் அலங்கல் மாலை அரசர் கோன் சிறுவன் - அழகிய தளிர்கள் விரவக்கட்டிய அசைந்தாடும் பூமாலையை அணிந்த அரசர்க்கரசனுடைய புதல்வன், அம் தார் இந்திரன் புதல்வன் ஒப்பான் - அழகிய மாலையை யணிந்த இந்திரன் புதல்வனாகிய ஜயந்தனை ஒத்தவனும், ஏந்தல் - ஆடவரிற் சிறந்தவனும் ஆகிய, ஏமாங்கதன் - ஏமாங்கதன் என்னும் பெயரை உடையவன் ஆவான். மன்னா - அரசனே, (அவனுக்கு) இம்மந்திரம் உலகில் வாழும் - இந்தவித்தியாதர வுலகத்தில் வாழ்கின்ற, மன்னர் மாறு இல்லை - அரசர்களெவரும் ஒப்பாகமாட்டார்.

மந்திரம் - வித்தை, இங்கு வித்தியாதரர் உலகத்துக்கு ஆகுபெயர். மாறு - ஒப்பு, உவமை.

325. அருமணி யடுத்த வீதி
யச்சுவ புரம தாளும்
திருமணி திகழும் பூணன்
பெருமகன் சிறைவண் டென்னும்
கருமணி துதைந்த பைந்தார்க்
கனகசித் திரனை யன்றே
ஒருமணி திலக மாக
உடையது நிலமதென்றான். 88.

அருமை மணி அடுத்த வீதி - அருமையாகிய பல இரத்தினங்களின் காந்தி சேர்ந்த வீதிகளையுடைய, அச்சுவபுரம் அது ஆளும், அசுவபுரத்தை ஆளும், திருமணி திகழும் பூணன் - அழகிய மணிகள் விளங்கும் ஆபரணங்களை அணிந்த மன்னனுடைய, பெருமகன் - மூத்த மகனாகிய, சிறை வண்டு என்னும் - சிறகுகளையுடைய வண்டுகளாகிய, கருமை மணி துதைந்த பசுமைதார் - நீலமணிகள் செறிந்த பசுமையான மாலையை அணிந்த, கனகசித்திரனை - கனகசித்திரன் என்பவனை, அன்றே - அல்லவா, நிலம் அது - இவ்வுலகம், ஒருமணி திலகம் ஆக உடையது - ஒப்பற்ற மாணிக்கத் திலகமாகப் பெற்றிருக்கின்றது, என்றான் - என்று சொன்னான்.

---

326. சீரணி முழவ மோவாச்
சிறிநிலை யதனை ஆளும்
காரணி தடக்கை வேந்தன்
காண்முளை கனபொன் னார்ந்த
தேரணி யரவத் தானைச்
சித்திரத் தேரின் பேரான்
தாரணி மார்ப னன்றே
தரணிக்கோர் திலத மாவான். 89.

சீர் அணி - சிறப்புவாய்ந்த, முழவம் ஓவா - முழவொலி ஓயாத, சிறிநிலை அதனை ஆளும் - சிறிநிலை யென்னும் புரியை ஆளும், கார் அணி தடக்கை வேந்தன் காண்முளை (ஈகைத் தன்மையில்) மேகத்தின் குணத்தைக் கொண்ட விசாலமான கையையுடைய வேந்தன் மகனும், கனம்பொன் ஆர்ந்த தேர் அணி - கனமான தங்கத்தால் செய்த தேர்ப்படையோடு கூடிய, அரவம் தானை - ஆரவாரத்தோடு கூடிய சேனையையுடைய, தார் அணிமார்பன் - மாலையை அணிந்த மார்பையுடையவனுமாகிய, சித்திர தேரின் பேரான் - சித்திரரதன் என்னும் பெயரைக் கொண்டவன், அன்றே - அல்லவா, தாரணிக்கு ஓர் திலதம் ஆவான். இந்த உலகத்துக்கு ஒப்பற்ற திலகம்போல்பவன் ஆவான்.

கால்முளை - மகன். திலதம் - திலகம்.

---

327. கற்றவர் புகழுஞ் சீர்த்திக்
கனகபல் லவத்தை யாளுங்
கொற்றவன் சிறுவன் கோலக்
குங்குமக் குவவுத் தோளான்
செற்றவர்ச் செகுக்குஞ் செய்கைச்
செருவல்லான் சிங்க கேது
மற்றவன் பிறந்த பின்னை
மண்மகள் மகிழ்ந்த தென்றான். 90.

கற்றவர் புகழும் சீர்த்தி - கற்றவரால் புகழப்படும் பெருங் கீர்த்திவாய்ந்த, கனகபல்லவத்தை ஆளும் - கனகபல்லவம் என்னும் இடத்தை ஆளும், கொற்றவன் சிறுவன் - மன்னன் மகனும், கோலம் குங்குமம் குவவு தோளான் - அழகிய குங்குமக் குழம்பு பூசிய திரண்ட தோளை யுடையவனும், செற்றவர் செகுக்கும் செய்கை செருவல்லான் - பகைவரை அழிக்குந் தொழிலோடுகூடிய போரில் வல்லவனுமாகிய, சிங்ககேது - சிங்ககேது என்னும் பெயரை உடையவன் ஆவான். அவன் பிறந்த பின்னை - அவன் பிறந்த பின்னரே, மண்மகள் மகிழ்ந்தது. (தனக்குத் தக்க நாயகன் கிடைத்தான் என்று) பூமிதேவி மனமகிழ்வுற்றாள், என்றான் - என்று சொன்னான்.

சீர்த்தி - மிகுபுகழ்.

நவராத்திரி

[ஓர் நாடகம்]

[608-வது பக்கத் தொடர்ச்சி]

இங் :—என் காரியமாய் நான் இருக்கையில் ஏன் என்னை அழைத்தாய்.

காமா :—என்ன காரியம் உனக்கு?

இங் :—என் அன்னையைத் தேடுதலே!

ராஜீ :-(திரும்பிவந்து) ஏமாற்றி விட்டாயே என்னை! எங்கே ஒளிந்துகொண்டிருந்தாய்!

துரை :—குஞ்சு—வாம்மா இங்கே, உன் அன்னை இங்கிருக்கிறாள் பார்—அருகு வா—இருட்டு—நன்கு காண நெருங்கிவா!

ஒரு குரல் :-என்னையன்றோ அன்னையென்று நினைத்துக்கொண்டிருக்கிறாள்.

[தியாகு இடப்புறத்திலிருந்து வருகிறான்]

காமா :—தொன்னை யென்று நினைத்துக் கொண்டிருக்கிறாள்-இங்குப் பிராமணார்த்தம் ஒன்றுமில்லை-போ வெளியே-ராவு ஒவு கிடையாதிவ்வீட்டில்! போகலாம்!

தியா :—இவள் தாய் உயிரோடிருக்கிறாளா!

காமா :—ஆம்!

இங் :—எங்கே? எங்கே? காட்டு!

துரை :—வா இங்கே!

இங் :—முன்போல் இன்னொன்றா?

தியா :—ரப்பரோ—வேறு யாதோ?

ராஜீ:-வாடா மாயாண்டி, அந்த ரப்பருக்குச் சண்டை போட்டாயே? பேரென்ன சொன்னாய்?—(தியாகுவிடம்) மிர்லி மாண்டோவா, கர்லாசாண்டோவா? என்ன அது? அப்பா சிரித்தாரே!

மாயா :—எங்கே எங்கே (மச்சுப்படிகளில் இறங்கி வருகையில்)

துரை :—நகராமல் அசையாமல் உட்காரு! கொஞ்சம்! என் முகத்தைப் பார்!

இங் :— பார்த்தேன்—தாடி ரொம்ப வெளுத்து நீண்டிருக்கிறது, தலைமயிர் கறுத்திருக்கிறது.

உரு :— அவைகளைப் பார்க்கச் சொல்லவில்லை, இமைகொட்டாமல் அவர் கண்களைப் பார்!

இங் :— (சிரித்துக் கொண்டு) இமைகொட்டவில்லை!

தியா:—யார் யாரை வசியம் செய்யவேண்டுமிப்போ! குஞ்சு— நீயா அவனை...

உரு :—கைகளைத் தடவி உடம்புமேல் மெஸ்மெரைசு பண்ணுங்கள், சாமியாரே!

இங் :—எங்கே அன்னை? காட்டுகிறேன் என்றாயே!

துரை :—இதோ இந்தா...

இங் :—ஹ ஹா! இதா, என் அன்னை?— பார்க்கிறேன் (சிரிக்கிறாள்)

காமா :—எடுத்துக்கொள் கையில்! உனக்கென்றே கனமில்லால்...

இங் :—பொம்மை !! அல்லவா? (சிரிக்கிறாள்)

காமா :—பொம்மை இப்படியிருக்குமா—கையாடுமா இதுபோல்!...

இங் :—விரலாடாவிடின்—அள்ளி என் [illegible] முடியும், தள்ளி என்ன வீசமுடியும்?

தியா :—போடு—பலே போடு!

மாயா:—எங்கே அந்த ரப்பர்—

ராஜீ :—அதோ அங்கிருக்கிறது—அது உனக்கு, இது எனக்கு?

மாயா:—எது-(புதுப்பொம்மையைப்பார்த்தவுடன்) ஹ ஹா! என்ன அழகு-வெள்ளைக்காரக் குழந்தைபோல்! எனக்கு!

உரு :—காலும் ஆடுகிறது பார்—ஓடுகிறாப்போல் இருக்கிறது பார்—(கீழ்வைக்கிறான்)

இங்:—ஓடச் சொல்—ஏன் ஓடவில்லை? (சிரிக்கிறாள்)

மாயா :—(பொம்மையை எடுக்கப் போகையில்) நான் எடுத்துக்கொண் டோடிவிடுகிறேன்.........

ராஜீ :— எடு! எடு!—இவன் எடுக்கும்முன்....பிரியக் கூடாது.

துரை:— (வெடுக்கென எடுத்து) உன்னிடம் இருக்க வேண்டும்,—குஞ்சுவை விட்டுப் பிரியக்கூடாதென்றே ஓடவில்லை!

காமா :—எடுத்துக்கொள்ளம்மா - வாங்கிக்கொள்!

துரை :—(வாங்கிக் கொண்டு) தலையையும் ஆட்டுகிறது பார்...வலமும் இடமுமாய்......

தியா :—நீங்கள் மேலும் கீழுமாய்—அது வலமும் இடதுமாய்!

உரு:—வாயை மூடடா-நறுக்கிவிடுவேன் நாக்கை.

சுப:—மாட்டேன் மாட்டேன் என்று மறுக்கிறது அது. இந்தச்சாமியார் ஆகட்டும் ஆகட்டும் யோசிக்கிறேன் என்கிறது" என்றுதானே சொல்கிறாரவர்... கோபமா?

உரு:—ஆகட்டும் ஆகட்டும் நானும் யோசிக்கிறேன்?

ராஜீ :—என்ன பொம்மை யது...தலைமயிர் செம்மட்டை—வெள்ளைக்காரர்போல்...

உரு :—வெள்ளையர்க்குக் கறுப்புமயி ரில்லையோ— என் மயிருந்தான் செம்பொன் திகழவில்லையோ ஆங்காங்கே?

தியா:—தலைக்கு உள்ளும் புறமுமாய் வெள்ளைத்தனம் என்றாள் ராஜீயா; சீற்ற மேன்?

காமா:—குஞ்சு! இந்தா—எடுத்துக் கொண்டு, அம்மாவுடன் கொஞ்சிக்கொஞ்சிக் கொண்டு பேசிக்கொண்டு, உன் கதைகளை எல்லாம் சொல்லு போ.

இங்:—அவள் எங்கே?

காமா:—அதுதான்-வாங்கிக்கொள்!

இங்:—(வாங்கிக்கொண்டு) ஏன் பேசவில்லை இது?

துரை:—நீதான் முதலில் பேசவேண்டும்! அதற்குக் கோபம், நீ சரியாய் அவளைக் கவனிக்கவில்லை என்று-

காமா:—சாமியாரே— செயித்துவிட்டீர் - வாங்கிக் கொண்டாள் பாருங்கள்!

இங்:— எறிந்துவிடுகிறேன் — வேண்டா மிது... [illegible] என் அன்னை? அழகழகு! (சிரிக்கிறாள்)

[illegible] வாங்கிக்கொடுங்கள் சாமியாரே!

[illegible library stamp]

ராஜீ:—எனக்கு! எனக்கு! (கீழிறங்கி) நான்தான் குழந்தை! எனக்கு வயது ஏழேதான்! சின்னஞ் சிறு......

மாயா:—எனக்கு நாலுதானே! (அனைவரும்சிரிக்க) நாங்கள் சண்டை போடுவது உங்களுக்குச் சிரிப்பு!

ராஜீ:—நான்தான் பெண்பால்!

மாயா:—பெண்ணுக்குத்தான்பாலிருக்கும்; ஆணுக்கேது பால், வறட்டுப்புதர்க் காம்புகளிலே?

உரு:—சீ புல்லா! சாமியார்க்கெதிரே-மகடூஉ முன்னிலையாக?

மாயா:—இந்தக் குழந்தைபொம்மை ரொம்ப அழப்போகிறதா தாய்ப்பாலில்லை என்று? என்னிடம் பாலில்லாவிட்டால் என்ன? இந்தச் சிறு பெண்தான் என்ன? முலைகொடுக்கப் போகிறாளா?

ராஜீ:—(அனைவரும் நகைத்ததைப் பார்த்து மருண்டு) அவன் பக்கம் சேர்கிறீர்களோ? நான் பணக்காரி—நன்றாய் வைத்துக்கொள்வேன்-பட்டுப் பகட்டாடைகள் கட்டி, மெத்தை தைத்து-தொட்டி லாட்டி...

மாயா:—நான் ஏழை, எனக்குத் தருவோரில்லை. வேறே கடையில் வாங்கமுடியாது தட்டுக்கொடுத்து - 12பழங்களுக்கே முட்டாள்தனமாய் 12ரூபாய் கொடுத்து....

உரு:—என் காதில் விழவில்லை-என்ன சொன்னாய்?

சுப:—தனம்—செல்வம் முட்டாள்களுக்கே வருகிறது என்று அவளை ஏசுகிறான்!

உரு:—என்னை வையவில்லையே? உனக்குமில்லை, அவளுக்குமில்லை, இவளுக்கே-நான் சொல்லிவிட்டேன்...

இந்:—நீ சொல்லிவிட்டால்? நான் கட்டித்தழுவ வேணுமோ—தூக்கிஎறிகிறேன் அந்தக் குளத்தில் - (உயரத் தூக்கி எறிகிறாள்-மச்சுக் கைப்பிடிசுவர்மேல்பட்டுக் கீழ் விழுகிறது)

காமா:—அடி பாவி!

உரு:—நான் சொன்னேனே!

தியா:—நானும் சொன்னேன்!

சுப:—இவள் சமர்த்தே சமர்த்து!

மாயா:—	எனக்கு	இருவரும் பொம்மையைப்
ராஜீ:—	எனக்கு	பற்றிக் கொள்ள...

ராஜீ:—விடு எனதுதான்—

மாயா:—எனதுதான்—(இருவரும் பொம்மைக் கைகளைப் பற்றி இழுக்க)

உரு:—இவள் ஒரு கையை இழுக்கிறாள்—அறுந்தது.........

மாயா:—விடு, அறும்! (மெள்ள இழுக்க) விட்டுவிடு! அறுந்துபோகும்.

ராஜீ:—(ஒரு காலையும் பிடித்துக்கொண்டு)விட்டுவிடு! அறுந்துவிடும்.......

சுப:—இருவருக்கும் இழுக்கப் பயம். விடவும் மனமில்லை—காட்சியே காட்சி!

தியா:—இரட்டையாட்சி! இழுங்களிருவரும்!

உரு:—பொம்மை கிழியவா?

இந்:—பொம்மை கிழிந்து, அன்னை வெளிவர!—இழுங்கள்!

மாயா:—விடு! எனதே!

ராஜீ:—எனதே! விடு!

காமா:—விடாதேடா பிடியை! பிடுங்கு!

தியா:—விடாதே நீயும்...பிடுங்கு!

காமா:—ஏண்டாப்பா—பிடுங்கி?

தியா:—குஞ்சு விடம் கொடுக்க!!

காமா:—நானும் அதற்குத்தான் சொல்கிறேன் பிடுங்கு!

துரை:—இருவரும் அவளிடமே கொடுக்கவேணும் என்றால் பிடுங்கி நாசம் செய்வானேன்— இருவரும் ஒத்துழைத்து, கைக்குக்கை தாங்கி ஒற்றுமையாய் அவளிடம் சமர்ப்பிக்கட்டுமே!

மாயா:—விடேன்!

ராஜீ:—விடேன் [இருவரும் இழுக்க, பொம்மையின் கால்களும் கைகளும் கிழிபட்டு உதிர்கின்றன.]

தியா:—இந்தச் சண்டையில் வெள்ளையன் தலை அப்படியே கெடாமலிருக்கிறது பார், அதே புன்சிரிப்புடன்!

உரு:—அது எனக்கு! (எடுத்துக் கொள்கிறான்)

[வானில் இடி இடிக்கிறது, மின்னுகிறது)

காமா:—இடிக்கிறேன்பா ருன்னையும்......ஏண்டி தூக்கி எறிந்தாய் வெளியிலே! (குட்டுகிறான் தலையில்] அப்பாடா— என் கைதான் வலிக்கிறது — கல்லா இவள் தலை!

இந்:—(சிரிக்கிறாள்) இன்னும் தண்டனை?

துரை:-புத்திசொன்னாலும் மூளையில்ஏறுவதில்லை-தலை கல்லும் மண்ணுமே!

ராஜீ:—படவா— சனியனே!

மாயா:—பிடாரி—பேயே!

தியா:—சண்டை வேண்டாம் வாங்கள் உள்ளே; மழை தூறுகிறது!

இந்:—மழை! மழை!! (குதிகுதிக்கிறாள்) வானம் பொழிகிறது!

ராஜீ:—அந்தக் கையைத் தருகிறாயா மாட்டாயா?

மாயா:—என்னிடம் ஒன்று இருக்கிறது; அதைத்தா நீ!

சுப:-ஏண்டா பொய்சொல்லுகிறாய், உனது இரண்டுகைகாலுமிருக்கே!

மாயா:—பொம்மைக் கை!

தியா:—பொம்மைக்கை மண்வெட்டி பிடிக்குமா— எதற்கு வேணும் உனக்கு—கொடுத்துவிடு! (அவர்களைப் பிரிக்க இறங்குகிறான்)

மாயா:—இரண்டு கைகளும் வேண்டும்! தா அதை! நான் கவண்டன், கோபம் வந்தால் கொலைக்கும் அஞ்சமாட்டேன்!

தியா:—மாயாண்டி, கையைக்கொடுத்துவிடு...மற்ற காலைத் தரச் சொல்கிறேன் நான்—சீக்கிரம் மழை, என் சட்டையெல்லாம் நனைகிறது.

ராஜீ:—காலை நான் தந்தால்...சைகிள் விடுவதெப்படி (சிரிக்கிறான்) நான் தரமாட்டேன்...

ஊழ்வினையும் ஆள்வினையும்

[612-வது பக்கத் தொடர்ச்சி]

இன்ன பிற விடயங்களை நோக்குங்கால், பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்தலோடு அவர்களுக்குத் தீவினை வாய்த்ததே என்று இரங்கும் நன்மனச் செவ்வி நம்மைப் புதுப்பிறவி ஆக்குகின்றது! இதனை நாயனாரும்,

> "பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்" என்கின்றார்.

பெரியோர் உலகுக்குதவும் நன்மையிவ்வாறாக, நன்மைசெய்யவோ தீமைசெய்யவோ நமக்குஉரிமை உண்டென்றும் கர்மம் தானே பலிக்குமென்றும் அறிந்த நாம் அதன் வகைகளையும் உதாரணமுகத்தால் தெரிந்துகொண்டால் தெளிவடைவோம். நல்லூழ் பயன்படும்போது சுபவாதனை தொடரவேண்டு மென்றாவது தீயவூழ் நுகரவருங்கால் அசுபவாதனை வரவேண்டுமென்றாவது நியதி இல்லை. நல்லூழ் பயன்படும்போது மலினவாதனை வருதலுங் கூடும். அந் நல்லூழோடு வாதனையும் சுபமாதலும் கூடும். தீயவூழ் வருங்கால் சுபவாதனை வருதலுண்டென்றுங் கொள்ளவேண்டும்.

அத் தீயவூழோடு அசுபவாதனை வருமென்பதை மறப்பாருமில்லை. நல்லூழ் வருங்கால் வாதனை தீயதாயின், பிறர்மனை போகம்புசித்தல், பிறரது பொருளை வெளவல்முதலியவைகளால் இன்பம்நுகர்வன். அந்நல்லூழோடு சுபவாதனை வரப்பெறுமேல் தீர்த்தயாத்திரை திவ்யத் தலதரிசனம் க்ரந்த காலக்ஷேபம் செய்யப்போய் அங்ஙனம் சென்றவிடத்து ராஜஸ்நேகம் உத்தியோகம் முதலியவைகளால் இன்பம் அநுபவிக்கலாம். தீயவூழ் வருங்கால் சுபவாதனை நேருமாயின், நோன்பு தான தருமம் முதலியவைகளைச் செய்து தரித்திரனாய்த் துன்பம் அநுபவிக்கலாம். தீயவூழோடு அசுபவாதனை சேருமாயின் களவு, பிறர்மனைகாமுறல் மதுவுண்ணல் இவை யனையவைகளால் மானங்கெட்டுப் பொருளிழந்து தரித்திரனாய்த் துன்பப்படுவான். இவ்வாறு வினை விளங்கமாகச் சென்றுகொண்டிருக்க அறியாதவராகவோ மறைப்பான் வேண்டியோ "நான் என் செய்வேன், என் கர்மம் என்னை இவ்வாறு இழுத்து விட்டுவிட்டது—புத்திஃ கர்மாநுசாரிணீ" என்று சமாதானங் கூறுவது எவ்வகையிலும் பொருந்தாத அறியாமையின்பாற் பட்டதாகும்.

இங்ஙனம் நடைபெறும் கன்மம் ஜடப்பொருளாதலால், தானேநம்மைவந்துறுத்தும் ஆற்றல் பெற்றிலது. அவ்வவர் செய்யும் வினையை அவரவர்பால் சேருமாறு இறைவன் இயக்குகின்றான். இதனால் இறைவனையே 'ஊழ்' என்று கூறுதலு முண்டு. 'நரகும் சுவர்க்கமும் நல்வினையும் ஆகினன்' என்று அடியார் அவனை வழுத்துகின்றார். உலகில் படைத்த பல்லாயிரங் கோடி ஜீவராசிகளின் அவரவர் வினை அவரவரே அடையுமாறு ஆண்டவன் அருள்புரியும் ஆற்றலை நோக்கினால் அவன்றன் நடுநிலைமை விளங்கும். தீச்செய்கை செய்தவர் வினைப்பயன் நுகரவருங்கால் தெய்வத்தைத் திட்டுவோரு முளர். 'செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்தவருமோ;' இதனை அறிவீனம் என்றே கழிப்பாம்.

தீயவாதனையை உகுத்துவிட்டு நல்ல வாதனையைப் பெருக்குதற்கு உபாயம் இரண்டொன்றைக் குறிப்பாம். கர்மம் வாதனை இவைகளின் பதிவுகள் மனதில் பொறிக்கப்படுவதால், மனத்துக்கு மலினம் வராமல் காக்கவேண்டும். மனமானது மலினமடையுங் காரணங்களிலே உடல்நலம் இல்லாமையும் ஒன்றாகும். 'உடலா ரழியின் உயிரா ரழிவர்' என்பார். உயிரைப் பற்றி உடலைப் பேணவேண்டும். உடனல முடையரேனும், உத்தமமான குணங்களை உண்டாக்கவும் தீக்குணங்களை நீக்கவும் உதவிபுரிவது உணவும் ஒன்று. அதனால், உணவையும் ஆய்தல் வேண்டும். உணவு பேதத்தால் மூர்க்ககுணமுடைய மக்களைக் காண்கின்றோம். மனத்துக்கண் மாசிலனாதல் மிகவும் அவசியம். மனத்தூய்மைக்குப் புலால் கள் சாராயம் பீடி சுருட்டு முதலியவைகள் கெடுதிசெய்பவைகளென்ன எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவைகள். தவிர, செடி கொடி மரங்களில் உற்பத்தியாகும் பதார்த்தங்களிலும் தாமத குணமுடைய சிலவுள. அவைகளை விலக்கிவிடுவதே மிக்க நலமாகும். 'ஆஹார சுத்தி சித்த சுத்தி' என்று வேதம் விளம்புகிறது. கீதாசாரியனும் ஆகாரத்தைச் சாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று மூன்றுவகைப்படுத்தி முதலதை முக்கியப்படுத்துகின்றான். ஸ்மிருதிகள் உண்பன உண்ணாதன இன்னின்னவை யென்று பரக்கக் கூறுகின்றன. வேதாந்ததேசிகரும் ஆகாரநியமனம் என்ற க்ரந்தம் அருளி எவ்வெப்பொருள் உண்ணலாகா தென்பதையும் எவரிடத்துள்ளதை உண்ணலாகா தென்பதையும், எவ்வெவ்வுருவிலுள்ளதை உண்ணலாகா தென்பதையும், விளக்குகின்றார். அதன்படி ஆகாரம் அருந்துவதால் ஆன்ம நலனுக்கு ஆதரவு தந்தவராவோம்.

உலகினர் வினையின் தத்துவத்தை நன்கறிந்துகொள்ளவும், தன்னடி யடைந்து உய்யவும் உதவியாய் இறைவன் அருளியது வேதம் (கலைகள்). ஆதலால், அதை அறிவதற்குக் கல்வி அவசியம் வேண்டற்பாலதாகும். கல்வியின்றேல் எதையும் பகுத்தறியும் விவேகம் உண்டாகாது. நல்வினை இயற்றவும் தீவினையகற்றவும் விளங்கும் அறிவுக்கு அடிப்படையானது கல்வி யல்லவா?

> கற்பக் கழிமட மஃகும் மடமஃகப்
> புற்பந்தீர்ந் திவ்வுலகின் கோளுணரும்
> கோளுணர்ந்தால் தத்துவமான நெறிபடரும்
> அந்நெறி இப்பாலுலகில் இசைநிறீஇ
> உப்பால் உயர்ந்த உலகம் புகும்.

என வீடின்பம்பெறச்செய்வதும் கல்வியாயிருத்தலால் இன்றியமையாது அது வேண்டற்படுவதாகும். இம்மையில்பேரின்பம்பெருக்கிப் பேரானந்தம்விளைப்பது கல்வியே—கலைகளே. கலை பொதுளிய கம்பர்தம் கவிஞுறு காவியத்தைக்கற்றும் கருதியும் உணர்ந்தும்உவக்கும் இன்பத்தினும் கடவுளின்பம் சிறப்போ. இக்கலை நலம் உண்ட பெரியார் தலைநலம் அன்றி இத்தலநலம் விரும்புவரோ. "நலங்களாய நற்கலைகள் நாவினும் நவின்றிலேன்" என்று கலையின் உயர்வை திருமழிசை ஆழ்வாரும்,

> கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும்
> கருத்துளே திருத்திலேன் மனத்தைப்
> பெற்றிலே னதனால் பேதையே னன்மை
> பெருநிலத் தாருயிர்க் கெல்லாம்

செற்றமே வேண்டித் திரிதருவேன் தவிர்ந்தேன்
செல்கதிக் குய்யுமா றெண்ணி
நற்றுணை யாகப் பற்றினே னடியேன்
நாராயணா வென்னு நாமம், என்று

வெற்றிவேற் கலியனும் விளம்பினன். வேதந் தமிழ் செய்த மாறன் சடகோபனைப் பத்துப்பாசுரங்களால் பாதம்பரவிப் பரனடிசேர்ந்த மதுரகவியார் கூறும் பாசுரங்களில் ஒன்றான "நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்" என்னும் பாசுரத்துக்கு வ்யாக்கியானம் செய்யவந்த, தாய்ப்பாலும் உண்ணாது ஒதா துணர்ந்த நாதன் மகிழ்மாறன் 'நற்குருவின் திருவுளத்தை' வேதந்திருவாய் மொழியின் உதவியைக் கொண்டு உலகுக்கு "ஆசார்ய ஹ்ருதயம்" என்னும் அருந்தத்துவத் திருமுறை தந்தருளிய 'அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்; "(நன்மையால் மிக்க நான்மறையாளர்கள் இவ்வாத்மகுண முண்டாகைக்குஉறுப்பாய்வேத சம்பந்தமாயிற்று, என்றும், 'நலங்களாய நற்கலைகள் என்றும் (குற்றம் செய்தாரை எவ்வளவிலும் கைவிடமாட்டாத இத்தோட்டை சம்பந்தமாயிற்று—இதுக்கடி. இக்கலைகளைக் கல்லாதவர்களிறே இந்நன்மை பெறுதவர்கள். 'கற்றிலேன் கலைகள்— பெற்றிலேனதனால் பேதையே னன்மை' என்கிறபடியே. இதடியாகவிறே பெருநிலத்தாருயிர்க் கெல்லாம் செற்றமே வேண்டித் திரிதந்தது.

இது கல்லாதவர்க ளாகையாலே லங்காவாசிகளான ராக்ஷஸர் ரிபுணமபி வத்ஸலரான பெருமாளோடே வெறுப்புக் கொண்டது! கல்லாதவ ரிலங்கையிறே. "இது கற்றவர்களுக்குப் பலம் அபகாரிகள் பக்கலிலே உபகாரம் பண்ணுகை. இது கல்லாதவர்களுக்குப் பலம் உபகாரிகள் பக்கலிலே அபகாரம் பண்ணுகை. இதுதான் மறையாகையாலே துஷ்ப்ருக்குதிகளுக்கும் ஸ்வார்தந்தைப் போதிப்பியாதிறே" என்று, திருவாய் மலர்ந்தருளுகின்றார். ஆதலால், கல்வி—கலையறிவு இன்றியமையாது வேண்டற்பாலதாகும்.

இவைகளுக்குக் காரணமான—கலையின் உண்மைப் பொருள் நெஞ்சிற்படுதற்குப் பெரியார் தொடர்பும் அருளு மிக வேண்டும். 'தெருண்டமேலவர் சிறியவர் சேரினும் அவர்தம் மருண்ட தன்மையை மாற்றி' உய்விப்பேர் ஆன்றோர். ஆகலால்,

நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

நம் பஜகோவிந்தத்தாரும், நல்லார் கூட்டுறவு ஜீவன் முக்திவரையிலும் எய்துவிக்கும் என்று, 'சத்சங்கத்வே என்ற ஸ்லோகத்தால் அருளினார். செங்காப் போதரும்,

" அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்."

என்று கூறுகின்றார். நல்லன இயற்றுவோரே நல்லாரைச் சேர இயலும். நல்லாரைச் சேர்ந்தோரைத் தீயன அணுகா. மேலோர் எங்கிருந்தபோதிலும் ஒருவரையொருவர் வர்த்தித்தே ஒழுகுவர். அத்தகைக் கூட்டத்தைக் காணக் கண்கள் பெருந்தவங் கிடக்கவேண்டும். அந் நல்லார் கூட்டத்தைச் சேர்வதற்கும் காண்பதற்கும் திருவரங்கத் தமுதனார் "கூட்டும் விதி யென்று கூடுங்கொலோ' என்று ஏங்கினார். நம் கம்பநாட்டடிகள் "குருகைப்பிரான் குணங்கூறு மன்பர் ஈட்டங்கடோறு மிருக்கப் பெற்றேன்" என்று மகிழ்ந்தார். இதுவே பேரின்பமாகும். இவ்வின்பம் அனுபவித்தவருள் ஒருவரென்று குறிப்பிடற் கேற்ற கண்ணகனார்,

பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியு
மிடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
யொருவழித் தோன்றியாங்கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே.

என்று பாடியுள்ளார். 'நல்லா ரிணக்கமும் நின் பூசை நேச முமே வேண்டுமென்று அடியாரும் ஆண்டவனை வழுத்துகின்றார்கள். பிறத்தல்முதற்கொண்டு இறக்கும் வரை ஒழிவிலின்பந் தருவதற்கோர் தொடர்பாம். தீயவாதனை நல்லோர் நட்பால் நலியப்படும்.

ஆண்டாள்

I. பிறப்பும் இளமையும்

[614-வது பக்கத் தொடர்ச்சி]

இவ்வம்மையாருக்குச் சிற்றில் கட்டும் விளையாட்டு மாத்திரமன்றி * இன்னும் இவர் மனதைக் களிக்கச் செய்யும் எவ்வித விளையாட்டுக்கும் விஷ்ணுசித்தர் யாதொரு தடையும் செய்யவில்லை. ஆயினும் இவர் மனம் குழவிப்பருவத்திலிருந்து நல்வழியிலேயே சென்றது. கோதையார் பூம்பொழில்களிற் பூக்களைப் பறித்தும் † மாந்தோப்புக்களிற் சென்று மாந்தளிர்

* நாம மாயிர மேத்த நின்றநா ராய ணாநா னேயுன்னை
மாமி தன்மக னாகப் பெற்றாலெ மக்கு வாதைத விருமோ?
காமன் போதருகால மென்று பங்குனி நாள்கடை பாரித்[தோம்
தீமை செய்யுஞ்சி ரீத ராவெங்கள் சிற்றில் வந்துசிதையேலே
2-வது திருமொழி 1.

† வெள்ளைவி ளிசங்கி டங்கையில்
கொண்டவி மலனெ னக்குரு காட்டான்
உள்ளம்பு குந்தெனை நைவித்து
நாளுமு யிர்பெய்து கூத்தாட்டு காணும்
கள்ளவிழ் செண்பகப் பூமலர்
கோதிக்க வித்திசை பாடுங் குயிலே
மென்னவி ருந்துமி ழற்றிமி
ழற்றாதென் வேங்கட வன்வரக் கூவாய்.
குயிற்பத்து 2.

‡கொய்தும் விளையாடுவார். அப்போது அவ்விடத்திற் காணப்படும் குயில்கள் மயில்கள் $ அன்னங்கள், மற்றுமுள்ள பறவைகள் வண்டுகள் இவற்றைக்கண்டு களிப்பார். இவர் தந்தையின் பூஞ்சோலையின்பாங்கர் ஓடும் ¶ ஆற்றுநீ ரோட்டத்தின் வெள்ளப்பெருக்கில் அடித்துக்கொண்டு போகும் பற்பல வஸ்துக்களின் அழகையும், பாசு § இலை முதலியன || நாணற்புற்களிற் சிக்குண்டு தியங்குவதையுங் கண்டு வியப்பார். இவர் கண்டனயாவும் புகைப்பட பிம்பமன்ன இவர் மனதில் நின்றன. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இவர் திருப்பதிகங்களில் வெளியாயினும், இவையனைத்தும் இவர் மனதில் குழந்தைப்பருவத்தி லூன்றிய வித்துக்களின் விளைவே யென்னலாம்.

நாச்சியாருக்கு நீரில் விளையாடுவது மிகவும் பிரியமெனக் காணப்படுகின்றது. குளிர்காலத்திலும்* குளிருமென்றெண்ணாது விடியுமுன் பொய்கைகளில் மடந்தைமார் நீராடச் செல்லும்போது, இச்சிறுமியும் தொடருமென்றே நாம் அனுமானிக்கத்தக்க சொற்றொடர்கள் இவர்பதிகங்களில் ஆங்காங்குக்காணப்படுகின்றன. அவ்வாறு நீர்விளையாடிக் குளிக்கத் தாமரைத் தடாகங்களிற் படியும்போது, † தாமரைத் தாள்கள் இவர் மெல்லிய பாதங்களிலழுந்தி வருத்தவும், இவர் தேள்கொட்டியதுபோல் வாதைப்பட்டதும் உண்டு. வீட்டுப் "புழைக்கடை"யிலுள்ள கிணற்றில் செங்கழுநீர், ‡ ஆம்பல் முதலியன பூத்திருப்பனவற்றையும் இவர் நின்று பார்க்க அஞ்சார்.

சிறுபோதில் விளையாட்டிலிருந்தஆர்வத்தால் நாச்சியார்உணவுகொள்ளச்செல்வதற்கும் உடன்படுவதில்லையென்னலாம். இவருக்குச் செவிலி முதலானோர் அடிசிலூட்டுவிததம் * காசுகொடுத்ததை நினைத்தாற்போல் இவர் பதிகங்களிற் கண்ணனை அமுதுசெய்ய வழைக்கின்றார். இவர் வீட்டில் உண்ணாமைபால் ஆனிரைப்பின் னழைத்துக்கொண்டு அருகிலுள்ள கானகத்திலும் † இவருக்கு அடிசில் ஊட்டும் வழக்கம் இவர் செவிலி முதலானோருக்கு உண்டென்று அனுமானிக்கத்தக்க பதிகங்கள் உள. அவ்வாறு வேனிற் காலத்திற் சென்று ‡ வெப்பத்தால் வருந்தியதும் உண்டு. ஆயினும் செல்வப் பிள்ளைகள்போல் இக்

‡ சார்ங்கம்வ ளையவலிக்கும் தடக்கைச
துரன்பொ ருத்த முடையன்
நாங்களெம் மில்லிருந் தொட்டிய
கச்சங்கம் நாணும வனுமறிதும்
தேங்கனி மாம்பொழில் செந்தளிர்
கோதுங்சி றுகுயிலே திருமாலை
ஆங்குவி ரைந்தொல்லை கூகிற்றி
யாகில வனைநான் செய்வனகாணே!
5-ம் திருமொழி, குயிற்பத்து 8.

$ பைம்பொழில் வாழ்குயில்காள் மயில்
காளொண்க நவிலைகாள்!
வம்பக ளங்கனிகாள்! வண்ணப்
பூவைந றுமலர்காள்!
ஐம்பெரும் பாதகர்காள்! அணி
மாலிருஞ் சோலைநின்ற
எம்பெரு மானுடைய நிறம்
உங்களுக் கென்செய்வதே?
9-ம் திருமொழி (சிந்துரச் செம்பொடி) 4.

¶ 9. வது திருமொழி 10-ம் பாசுரத்தை நோக்குக (இம் மேற்கோள் முன்னே காட்டப்பட்டிருக்கின்றது.

§ பாசிதூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள்
மாசுடம்பில் நீர் வார மானமிலாப் பன்றியாம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசியிருப் பனகள் பேர்க்கவும் பேராவே.
11-ம் திருமொழி.

|| வாய்நல் லார்நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணற் படுத்துப் பரிதி வைத்துக்
காய்சின மாகளி றன்னானென் கைபற்றித்
தீவலஞ் செய்யக்க னாக்கண்டேன் தோழிநான்.
6-வது திருமொழி (வாரணமாயிரம்) 7.

* மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்கள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.
திருப்பாவை 1.

† தடத்தவிழ் தாமரைப் பொய்கைத்
தாள்களெம் காலைக் கதுவ
விடத்தேளெ றிந்தாலே போல
வேதனை யாற்றவும் பட்டோம்
குடத்தையெ டுத்தேற விட்டுக்
கூத்தாட வல்லவெங் கோவே
படிற்றையெல் லாம்தவிர்த் தெங்கள்
பட்டைப ணித்தரு ளாயே.
3-வது திருமொழி (கோழியழைப்பதன்) 6.

‡ உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய்க்கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய்! நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையான்
பங்கயக் கண்ணனைப் பாடலோ ரெம்பவாய்!
திருப்பாவை 20.

* இன்றுவந் தித்தனையு மமுதுசெய்திடப்பெறில் நான்
ஒன்றுநா றாயிரமாக் கொடுத்துப் பின்னு மாளுஞ்செய்வன்
தென்றல் மணங்கமழும் திருமா லிருஞ்சோலை தன்னுள்
நின்றபி ராணடியேன் மனத்தே வந்து நேர்படிலே.
9-வது திருமொழி (சிந்துரச் செம்பொடி) 7.

† கறவைகள் பின்சென்று கானஞ் சேர்ந்துண்போம்
அறிவொன்று மில்லாத வாய்குலத் துன்றன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாக் கோவிந்தா வுன்றன்னோ
டுறவேல் நமக்கிங் கொழிக்க வொழியாது
அறியாத பிள்ளைகளோ மன்பினா லுன்றன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறியரு ளாதே
இறைவா நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.
திருப்பாவை 28.

‡ முப்பத்து மூவ ரமரர்க்கு முன்சென்று
கப்பந் தவிர்க்கும் கலியே துயிலெழாய்
செப்ப முடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பங் கொடுக்கும் விமலா! துயிலெழாய்!
செப்பன்ன மென்முலை செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியுந் தந்துன் மணாளனை
இப்போதே யெம்மை நீராட்டேலோ ரெம்பாவாய்
திருப்பாவை 20.

காலத்தில் செவிலி இவரைத் திட்டப்படுத்துவதில் மிகவும் கஷ்டப்பட்டு,மலையினின்று சிங்கம் * சிவந்த கண்களுடன் மயிர்சிலிர்த்துக்கொண்டு பல்லைக்காட்டிக்கொண்டுவருமென்று பயப்படுத்தித் தன்வசப்படுத்திய அடையாளம் திருப்பாவையில் வெளிப்படையாய் விளங்குகின்றது. இத்தகைய பேரறிவின் வித்தாகிய இக்குழந்தையை வசப்படுத்தி எவ்வழிச் செலுத்துவதும் சாமான்யமன்று. இவர் இளம்பருவம் கண்ணன் குழவிப் பருவத்திற்குச் சமானமானதாய்,அவர் அசோதைப்பிராட்டியாரை யாட்டிவைத்ததுபோல், நாச்சியாரும் தன் னில்லத்துள்ள பெரியோர்களைத் தம் திருவிளையாடல்களால் திகைப்பித்தார் †.

3. ஆண்டாள் இளமையிற் கற்ற கல்வி

பெரியாழ்வார் வடமொழியிலும் தென்மொழியிலுஞ் சிறந்த புலவரென்பதற்குத் தக்கவாறு அவர்திருக்குமாரத்தியும் இருமொழியிலும் ‡ தேர்ச்சியடையத் தக்க எதுக்களைப்புதுவையர்கோன் செவ்வனே யமைத்தார். ஸ்ரீவில்லிப்புத்தூரென்னும் திருப்பதி பேரறிவாளர் நிறைந்த ஊரென முன்னரே கண்டோம். அத்தலத்திலுள்ள உருவிலும் ஒழுக்கத்திலும், மற்றுக் கல்வியிலுஞ் சிறந்த மறையோர்களால் * இவ்வம்மையாருக்குக் கல்வியும் ஓவியம் முதலிய கலைகளும் கற்பித்த இவர் தந்தையின் கஷ்டம் முற்றும் நற்பயன் தந்தது.இக்குழந்தை கற்க ஆரம்பித்தகாலத்தில் நமது குழந்தைகளைப்போல இவரும் தன் கல்விநலத்தைச் சுவரின்மீது † பதிபவைப்பது இவருடைய வழக்கமாயிருந்த தென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. நாளுக்குநாள் கலைஞ்ஞானம் பெருகலாயிற்று. வெண்மணலால் தெருவைச் சித்திரிப்பதும், உருவங்கள் எழுதுவதும் அவ்வாறு எழுதும் உருவங்கள்மேல் பூக்களை ‡ ஒழுங்காய் வைத்துப் பிம்பங்களைக் காட்டுவதும் இவர் கல்வியிலமைந்த கலைஞ்ஞானத் திருவிளையாடலாயின.

இவ்வருமைப்புதல்வி கல்விகற்கும்போதுபசியையுமடக்கிப்பின்னர்ப் போவெனச்சொன்னபின் பசிநீங்க அடிசிலுண்டிருந்து களிப்பர். செல்வத்தில் யாதொரு குறைவுமற்ற விஷ்ணுசித்தர் மகளுக்குப்*பசிநோயறியும் சந்தர்ப்பம் வேறில்லை. தான் பசித்து வேர்த்து வயிறசைந்த பிறகு உண்டது இவர்பிரத்தியட்ச அனுபவ வுணர்ச்சியென்றே நாம் அனுமானிக்கலாம்.

நாச்சியாருக்கு ஓவியம் சிற்பம் முதலிய கலைகளின் பயிற்சியும் செவ்வனே இருந்ததென அவர் பாசுரங்கள் காட்டுகின்றன. சிலைகளை "வார்ப்படம்" செய்தல் என்று உலகவழக்கிற் கூறும்† ஒருவகைச் சிற்பத்தில் கோதைநாயகியார் மிகவும் ஈடுபட்டதாயுங் காணப்படுகின்றது. ஏனெனில் விக்கிரஹம் வார்ற்றும் தொழிலில் தேர்ந்தவ ரெவ்வாறு பகர்வரோ‡ அத்தகைய கலைஞ்ஞானம் விளங்கச் சொற்றொடர்கள் கோதையார் பதி

* மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணாவுன்
கோயில்நின் றும்மிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரியசிங் காசனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.
திருப்பாவை 23.

† முல்லைப் பிராட்டி நீ உன்
முறுவல்கள் கோண்டேம்மை
அல்லல் விளைவியேல் ஆழி
நங்காய் உன்னடைக்கலம்
கொல்லை யரக்கியை மூக்கரிந்
திட்ட குமரனார்
சொல்லும் பொய்யானால் நானும்
பிறந்தமை பொய்யன்றே.
10-வது திருமொழி (கார்க்கோடல் பூக்காள்) 4

‡ பழுத நான்மறை யின்பொரு ளாய்மத
மொழுகு வாரண முய்யவ ளித்தவெம்
அழக னாரணி யாய்ச்சியர் சிந்தையுள்
நுழக னார்வரில் கூடிடு கூடலே.
4-வது திருமொழி (தெள்ளியார் பலர்) 10.

* உருவுடை யாரிளை யார்களல்லார்
ஒத்துவல் லார்களைக் கொண்டு வைகல்
தெருவிடை யெதிர்கொண்டு பங்கு னிநாள்
திருந்தவே நோற்கின்றேன் காம தேவா !
கருவுடை முகில்வண்ணன் காயா வண்ணன்
கருவிளை போல் வண்ணன் கமல வண்ணத்
திருவுடை முகத்தினில் திருக்கண்களால்
திருந்தவே நோக்கெனக் கருள்கண்டாய்.
1-ம் திருமொழி (தையொரு திங்கள்) 6.

† சுவரில் புராண! நின் பேரெழுதி
சுறவநற் கொடிகளும் துரங்கங்களும்
கவரிப்பி ணாக்களும் கருப்புவில்லும்
காட்டித்தந் தேன்கண்டாய் காமதேவா! ஷை 4.

‡ மத்தநன் னறுமலர் முருக்கமலர்
கொண்டுமுப் போதுமுன் னடிவணங்கித்
தத்துவ மிலியென்று நெஞ்செரிந்து
வாசகத் தழித்துன்னை வைதிடாமே
கோத்தலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு
கோவிந்த னென்பதோர் பேரெழுதி
வித்தகன் வேங்கட வாணனெனும்
விளக்கினிற் புகவென்னை விதிக்கிற்றியே.
ஷை - 3.

* கார்த்தண்மு கிலுங்க ருவிளையும்
காயாம லருங்க மலப்பூவும்
ஈர்த்திரு கின்றன வென்னைவந்திட்
டிருடிகே சன்பக்கல் போகேயென்று
வேர்த்துப்ப சித்துவ யிறசைந்து
வேண்டடி சிலுண்ணும் போதீதென்று
பார்த்திருந் துநெடு நோக்கம் கொள்ளும்
பத்தவி லோசனத் துய்த்திடுமின்.
12-வது திருமெழி - (மற்றிருந்தீர்) 6.

† மழையே! மழையே! மண்புறம் பூசியுள் ளாய்நின்று
மெழுகூற் றினுப்போல வூற்றுநல் வேங்கடத்துள் நின்ற
அழகப் பிரானார் தம்மையென் னெஞ்சத் தகப்படத்
தழுவிநின் றென்னைத்த ததைத்துக்கொண் டூற்றவும்
[வல்லையே ?
10-வது திருமொழி (கார்க் கோடல்) 8.

‡ தரும மறியாக் குறும்பனைத்
தன்கைச் சார்ங்க மதுவேபோல்
புருவ வட்ட மழகியபொ
ருத்த மிலியைக் கண்டீரே?
உருவு கரிதாய் முகம்செய்தாய்
உதயப் பருப்ப தத்தின்மேல்
விரியுங் கதிரே போல்வானை
விருந்தா வனத்தே கண்டேனே.
14-வது திருமொழி (பட்டிமேய்ந்து) 6.

கங்களிற் பொலிந்து தோன்றும். ஓவியக்கலையில் மலர்மேல் தொங்கும் வண்டினங்களையும், * சோலையம் புறவில் முல்லைக்கொடிகள் தவளநகை † காட்டுவதுபோல் பூத்து விளங்குவதையும் எவ்வாறு எழுதுவோர் கவனிப்பாரோ, அவ்வாறே நாச்சியாரும் பாடுகின்றார். கோங்கலர்மேல் ‡ கொன்றைகள் மாலையிட்டதுபோல் விளங்கும் காட்சி வியக்கத்தக்க தன்றோ? எங்கும் $ இந்திரகோபங்கள் பரவிக்கிடக்குமாயின், வசந்த காலத் ¶ திரவில் நட்சத்திரக் கூட்டங்கள் மேகமற்ற வானகத்தில் முல்லை நிலத்தைப் படமெழுதியதுபோல் விளங்குதல் நமது இந்தியக் காட்சியன்றோ? இவற்றின் அழகு மாத்திரமன்று *. நீர்க்காலத்தில் எருக்கிலைகள் பழுத்துக் கொட்டுவதும், † கார் காலத்தில் சந்திரன் விளங்குதலும் அதனைச்சுற்றி மேகங்கள் ஓடுவதையும் ‡ நெடுநோக்கம் கோதையார் கொள்வர். இத்தகைய பார்வையே ஓவியக்கலையின் தேர்ச்சியடைந்ததற்கு அறிகுறியாம். இந்தநெடுநோக்கு இன்றேல், வெள்ளிமுளைக்க வியாழ முறங்குவதை யறியார்.$

* தங்கம லர்ப்பொழில்சூழ் திருமாலிருஞ் சோலை நின்ற
செங்கண் கருமுகிலின் திருவுருப் போல் மலர்மேல்
தொங்கிய வண்டினங்காள்! தொகுபூஞ் சுனைகாள் சுனையிற்
றங்குசெந் தாமரைகாள் எனக்கோர்சரண் சாற்றுமினே.
9-வது திருமொழி (சிந்தூரப்பொடி) 5.

† போர்க்களி றுபொருமா லிருஞ்சோலையம் பூம்புறவில்
தார்க்கொடி முல்லைகளும் தவளநகை காட்டுகின்ற
கார்க்கொள்பி டாக்கள்நின்று கழறிச்சிரிக் கத்தரியேன்
ஆர்க்கிடு கோதோழி! அவன் தார்செய்த பூசலையே!
ஷை 2.

‡ கோங்கல ரும்பொழில்மா
லிருஞ்சோலையில் கொன்றைகள்மேல்
தூங்குபொன் மாலைகளோ
டுடனாய்நின்று தூங்குகின்றேன்
பூங்கொள் திருமுகத்து
மடுத்தூதிய சங்கொலியும்
சார்ங்க வில் நாணொலியும்
தலைப்பெய்வதெஞ் ஞான்றுகொலோ?
ஷை 9.

$ சிந்தூரச் செம்பொடிபோல் திருமாலிருஞ் சோலையெங்கும்
இந்திர கோபங்களே எழுந்தும்பரந் திட்டனவால்
மந்தரம் நாட்டியன்று மதுரக்கொழுஞ் சாறுகொண்ட
சுந்தரத்தோளுடையான் சுழலையில்நின் றுய்துங்கொலோ
ஷை 1.

¶ பொருத்தமுடையநம்பியைப்புறம்போ துள்ளுங்கரியானைக்
கருத்தைப் பிழைத்து நின்றவக் கருமாமுகிலைக் கண்டீரோ?
அருத்தித் தாராக் கணங்களா லாரப்பெருகு வானம்போல்
விருத்தம் பெரிதாய் வருவானை விருந்தா வனத்தே
கண்டோமே
14-வது திருமொழி (பட்டிமேய்ந்து) 7.

* கார்காலத் தெழுகின்ற கார்முகில்காள் வேங்கடத்துப்
போர்காலத் தெழுந்தருளிப் பொருதவனார் பேர்சொல்லி
நீர்காலத் தெருக்கிலம் பழவிலைபோல் வீழ்வேனை
வார்காலத் தொருநாள்தம் வாசகந்தந் தருளாரே?
8-வது திருமொழி - (விண்ணீல மேலாப்பு) 8.

† தடவரையின் மீதே சரற்கால சந்திரன்
இடையுவா வில்வந் தெழுந்தாற்போ லேநீயும்
வடமதுரை யார்மன்னன் வாசுதே வன்கையில்
குடியேறி வீற்றிருந்தாய் கோலப்பெ ருஞ்சங்கே!
7-வது திருமொழி (கற்பூரம் நாறுமோ) 3.

‡ அனுங்கவென்னைப் பிரிவுசெய்து ஆயர்பாடிகலந்துண்ணும்
குணுங்குநாறிக் குட்டேற்றை கோவர்த்தனனைக் கண்டீரோ?
கணங்க ளோடு மின்மேகம் கலந்தாற் போல வனமாலை
மினுங்க நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே!
14-வது திருமொழி (பட்டி மேய்ந்து) 2.

$ புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய் நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்!
திருப்பாவை 13.

யாப்பிலக்கணம்

செய்யுள்—வெண்பா

[615-வது பக்கத் தொடர்ச்சி]

வெண்பாவிற்குரிய பொது விலக்கணமெல்லாம் பெற்று இரண்டடியால் வருவதைக் குறள்வெண்பாவென்றும், மூன்றடியால் வருவதைச் சிந்தியல் வெண்பாவென்றும் அழைப்பதற்கேற்ப நான்கடிகளால் வருவதை அளவியல்வெண்பா என்று அழைக்கலாமாயினும், இலக்கணநூல்கள் அப்பெயரிட் டழைப்பதில்லை.

ஈரசைச்சீர்கள் நான்கும், மூவசைச்சீர்களில் வெண்சீர் எனப்படும் காயீற்றுச் சீர்கள் நான்கும் வரப்பெற்று, வெண்டளை பிறழாமல், செப்பலோசை யுடையதாய், முதல் மூன்றடி நான்குசீர்களுடைய அளவடிகளாகவும் மற்றைய நான்காவது அடி மூன்று சீர்களுடைய சிந்தடியாகவும், ஆக நான்கடிகளால் நடந்து, நாள் மலர் காசு பிறப்பு என்னும் இவ்வாய்பாடுகளின் ஒன்றினால் முடிகின்ற வெண்பாக்கள், நேரிசை வெண்பா வென்றும் இன்னிசை வெண்பா வென்றும் இருவகைப்படும். இன்னிசைச் சிந்தியல் வெண்பா நேரிசைச் சிந்தியல்வெண்பா, என மூன்றடிகளால்வரும் வெண்பாவைக் குறிப்பதுபோல், நான்கடிகளால் வருவனவற்றை அளவியல் இன்னிசை வெண்பாவென்றும், அளவியல் நேரிசை வெண்பா வென்றும் அழைக்கவேண்டா. இன்னிசை வெண்பா நேரிசை வெண்பா, என்றாலே, நான்கடிகளையுடைய வெண்பா என்பது பெறப்படும்.

வெண்பாக்களுக் கெல்லாம் உரிய செப்பலோசை, இளகிய மென்மையுடையதாயின் இன்னிசை எனவும், இறுகிய வன்மையுடையதாயின் நேரிசை எனவும் அழைக்கப்படுமென்பதை முன்னரே கூறியிருக்கின்றோம். இவ்வண்ணம் இன்னிசைக்கும் நேரிசைக்கும் இடமாக வல்ல நாலடி வெண்பாக்களின் இலக்கணம், பெரும்பாலும் சிந்தியல் வெண்பாக்களுக்

188930
NB1.4.12

குரைத்த இலக்கணத்தை ஒத்திருக்குமெனக் கொள்ளலாம்.

நேரிசை வெண்பா

இரண்டாமடியின் ஈற்றில்மாத்திரம் தனிச்சொல் பெற்று ஒருவிகற்பத்தாலேனும் இருவிகற்பத்தாலேனும் நாலடிகளால் வரும் வெண்பா நேரிசை வெண்பாவாகும்.

ஒரு விகற்பமாவது, நான்கடிகளும் ஒரே வகையான எதுகை பெற்றிருப்பது; இருவிகற்பமாவது, முதலிரண்டடிகள் ஒருவகை எதுகையும் பின்னிரண்டடிகள் மற்றோர்வகை எதுகையும் பெற்றிருப்பது. தனிச்சொல் என்பது, அவ்வடியின் முதற்சீரோடு ஒரூஉ எதுகையா யமைந்து பொருளாற் சிறிது பிரிந்து, ஒலியால் சிறிது விட்டிசைக்கும் ஈற்றுச்சீர் என்பதை முன்னரே கூறியிருக்கின்றோம்; இரண்டாமடி தனிச்சொல் பெறினும், ஒன்று அல்லது இரண்டு விகற்பமாயல்லாமல் பலவிகற்பமாய்வரும் வெண்பா நேரிசையாகாது. அது இன்னிசையாய் விடும்.

அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்.

இது,இரண்டாமடி தனிச்சொல்பெற்று முதலிரண்டடியும் ஒருவகை எதுகையால் ஒரு விகற்பமாகினும், மற்ற இரண்டடிகளுக்கும் எதுகையின்றி வெவ்வேறு விகற்பமாகிப், பல விகற்பமுடையதாகலால் நேரிசை வெண்பா அன்று—இன்னிசை வெண்பா.

நளவெண்பாச் செய்யுள்களெல்லாம் நேரிசைவெண்பாக்கள். அவையனைத்தும் இருவிகற்பத்தால் வருவனவென்றே சொல்லலாம். எனினும்,

மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய-நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னுடல் சொல்லென்று ளீங்கு

என்பதுபோல் நான்கடிகளும் ஒருவகை எதுகையால் ஒரு விகற்பமாகி இரண்டாமடியின் ஈற்றில் தனிச்சொல்பெற்ற நேரிசைவெண்பாக்கள் நளவெண்பா நூலில் ஒன்றிரண்டு இருத்தலுங்கூடும்.

மல்லன் மறுகின் மடநா குடனகர்
செல்லு மழ்விடைபோற் செம்மாந்து-மெல்லியளால்
மென்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலா னளன்.

என்னுமிது இருவிகற்பத்தான் வந்த நேரிசைவெண்பா. ஒரு விகற்பத்தால் வருவதைக் காட்டிலும் நேரிசை வெண்பாக்கள் இருவிகற்பத்தால் வருவதே சிறப்புடைய தென்பர். மூதுரை, நல்வழி நன்னெறிச்செய்யுள்கள் இருவிகற்பத்தால் வந்த நேரிசை வெண்பாக்கள்.

இனி, ஒரு விகற்பத்தாலும் இருவிகற்பத்தாலும் வரக்கூடிய நேரிசைவெண்பாக்கள், இருகுறள் நேரிசைவெண்பா என்றும் ஆசிடை நேரிசைவெண்பாவென்றும் இருவகைப்படும்.

இரண்டாமடி ஈற்றிலுள்ள தனிச்சொல்லை நீக்கி நோக்குங்கால், முதலிரண்டடி ஒரு குறள்வெண்பாவாக அமையுமாயின், அந்நேரிசை வெண்பா இணைக்குறணேரிசைவெண்பா வாகும். பின்இரண்டடி எப்பொழுதும் குறள்வெண்பாவின் இயல்பேயாயமைந்திருக்குமாதலின் அதனைக் கூறவேண்டியதில்லை. எனவே, தனிச்சொல்லை நீக்கி நோக்க, முதலிரண்டடி ஒரு குறள்வெண்பாவாகவும் மற்ற இரண்டடி ஒரு குறள்வெண்பாவாகவும் அமைவதால், இது இருகுறணேரிசைவெண்பா என அழைக்கப்படுகின்றது.

கலைமதியி னொளியுங் கவிச்சுவையுங் கஞ்ச
மலரழகு மின்மணமுங் கொண்டு—சிலைமாரன்
கைம்மலரா லன்றிக் கருத்தால் வகுத்தமைத்தான்
மொய்ம்மலர்ப்பூங் கோதை முகம்.

என்னுமிதனில், 'சிலைமாரன்' என்னுந் தனிச்சொல்லை நீக்கிவிட்டால்,

கலைமதியி னொளியுங் கவிச்சுவையுங் கஞ்ச
மலரழகு மின்மணமுங் கொண்டு

என முதலிரண்டடிகள் ஒரு குறள்வெண்பா வாகின்றன. இதனில், இரண்டாமடி மூன்று சீர்களுடையதாவதுடன், ஈற்றுச் சீராகிய 'கொண்டு' என்பது உகரத்தை ஈற்றிலுடைய ஈரசைச்சீரும் (நேர்பசை என்னும் பெயரும் இதற்குண்டு) ஆவதால், குறள்வெண்பாவிற்குரிய இலக்கணமெல்லாம் வாய்ந்திருக்கின்றது. அவ்வாறே மற்ற இரண்டடிகளுஞ் சேர்ந்து ஒரு குறள்வெண்பா வாகும். இப்பாட்டுத் தனிச்சொல் பெற்று இரண்டு விகற்பத்தால் வந்திருப்பதால், இது இரு விகற்பத்தால் வந்த இருகுறள் நேரிசை வெண்பா எனப்படும். இப்படியே,

நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கு—மடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

என்னும் இச் செய்யுளினும்,

நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கு

மெனத் தனிச்சொல் தவிர்த்து முதலிரண்டடிகள் சேர்ந்து, நிரையசைபை ஈற்றிலுடைய ஒரு குறள் வெண்பாவாதல் காண்க. இதுவும் இருவிகற்பத்தால் வந்த இருகுறணேரிசை வெண்பா.

அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு

இது, ஒரு விகற்பத்தால் வந்த இருகுறள் நேரிசை வெண்பாவாதல் காண்க.

குறிப்பு:—இரண்டாமடியின் மூன்றாஞ்சீர் உகரத்தை ஈற்றிலுடைய ஈரசைச்சீராய் நிற்கும் நேரிசை வெண்பாக்களெல்லாம் இருகுறள் நேரிசைவெண்பாவாகுமெனக் கொள்க. (வெண்பாவின் நடுவாதலால் அங்கு ஓரசைச்சீர் நிற்றலியலாதென்பது வெளிப்படை). இவ்வாறின்றி, இரண்டாமடியின் மூன்றாஞ்சீர்வேறெதுவாயினும் அந்நேரிசை வெண்பா. ஆசிடை நேரிசை வெண்பாவாகும்.

ஆசு, என்பது வெள்ளி பொன் அனைய உலோகங்களைப் பற்றவைக்கும் பொடி.

மன்றற் குழலா ருயிர்மேன் மதன்கடவுந்
தென்றற் கரிதடுக்குந் திண்கணைய-மன்றவரைக்
கங்குற் கடலிற் கரையேற்று நீள்புணையாம்
பொங்குநீர் நாடன் புயம்.

இதனில், 'மன்றவரைக்' என்ற தனிச்சொல்லை நீக்கினால், முதலிரண்டு அடிகளுஞ் சேர்ந்து ஒரு குறள் வெண்பா ஆதல் இயலாது. ஏனெனில் 'திண்கணைய' என்னும் அம் மூன்றாஞ்சீர் வெண்பாவினீற்றில் வரக்கூடிய வாய்பாடுகளில் ஒன்றன்று. எனவே,

மன்றற் குழலா ருயிர்மேன் மதன்கடவுந்
தென்றற் கரிதடுக்குந் திண்

என்பதோடு நிற்குமாயின் குறள்வெண்பா ஆகக்கூடும். மற்று, இப்படி நின்றாலோ பொருள் பயவாததுடன், தனிச்சொல்லோடு வெண்டளையும் ஆகாமற் கெடும். ஆதலின், பொருளாலும் தளையாலும் தனிச்சொல்லோடு முதற் குறள்வெண்பாவைப் பிணைப்பதற்கு, கணை-ய, என இரண்டு அசைகள் வந்திருக்கின்றன. இவ்விரண்டு அசைகளுந்தான் ஆசுகள். இவ்வண்ணம், ஆசு இடைவைக்கப்பெற்றிருப்பதால், இவ்வெண்பா ஆசிடை நேரிசைவெண்பா என அழைக்கப்படுகின்றது.

ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப—மூத்தொறாஉந்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார்.

இதனில், யடக்குப, என்பதிலுள்ள பகரம் மாத்திரம் ஆசாக வந்திருக்கின்றது. அப்பகரமும் தனிச்சொல்லும் இல்லையானால்,

ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்கு

என்பதுவரையில் ஒரு குறள்வெண்பா அமையும்; அக் குறள்வெண்பாவை, பின்வரும் மூத்தொறாஉந், என்னுந் தனிச்சொல்லோடு வெண்டளையாகும்படி சேர்ப்பது ப என்னும் எழுத்து. இது ஆசு. இது அசையன்று; அடக்குப, என்னுஞ் சீர் அடக்-குப, என இரண்டசைகளை யுடையது. எனவே பகரம் மாத்திரம் இங்கு ஓர் அசையாய் நிற்கவில்லை. அடக்-கு, என நின்றால் வெண்பாயீற்றிற்கு இயன்றதாகிவிடும். ஆதலால் ஆசாகவந்தது இங்கு, பகரம் ஆகிய அவ்வொரு எழுத்தே.

கருங்குயில் கையற மாமயி லாலப்
பெருங்கலி வான முரறும்—பெருந்தோள்
செயலை யிளந்தளி ரன்னநின் மேனிப்
பசலை பழங்கண் கொள

என்னுமிதனில், 'முரறும்' என்னுஞ் சீரிலுள்ள, றும் என்னும் ஓர் அசைமட்டும் ஆசாக வந்திருப்பது காண்க. ஆதலின், ஓர் அசையேனும், இரண்டு அசைகளேனும், அல்லது ஒரு எழுத்து மட்டுமேனும் ஆசாக இடையே வருதல் கூடும். இப்படி ஆசிடை பெற்று வருகின்ற நேரிசை வெண்பாக்கள், ஒரு விகற்பத்தாலேனும் இரு விகற்பத்தாலேனும் வாலாம். இச்செய்யுள் இரு விகற்பத்தால் வந்தது. (யகர சகரங்கள் எதுகையாகக் கூடும்.)

வணங்கு சிறுமருங்குற் போரமர்க்கண் மாதர்க்
கணங்கு புரிவ தறமாற்—றிணங்கி
நிணங்கா லுமுத்தலைவே னீள்சடையெங் கோமாற்
கிணங்காது போலு மிரவு.

இது ஒரு விகற்பத்து ஓராசிடை நேரிசை வெண்பா. மாற் என்னும் ஓர் நேரசை இங்கு ஆசாயிற்று.

இன்னிசை வெண்பா

வெண்பாவிற்குரிய பொதுஇலக்கணங்களையுடையதாய், இரண்டாமடியின் ஈற்றில்மாத்திரம்தனிச்சொல் பெற்று, ஒருவிகற்பமாயேனும் இருவிகற்பமாயேனும் நான்கு அடிகளால்வரும் செய்யுள் நேரிசை வெண்பா ஆகும். இதற்குமாறாக நாலடிகளில் வரக்கூடிய வெண்பாக்களெல்லாம் இன்னிசை வெண்பாக்கள் எனக் கொள்க. ஆதலின்,

1. தனிச்சொல் இன்றி ஒருவிகற்பத்தாலேனும் இருவிகற்பத்தாலேனும் பலவிகற்பத்தாலேனும் வருவனவும்,
2. இரண்டாமடியில் தனிச்சொல் பெறினும், பலவிகற்பத்தால் வருவனவும்,
3. எவ்விகற்பமாயினும், இரண்டாமடியிலன்றி மற்ற அடிகளில் தனிச்சொல் பெறுவனவும்,
4. எவ்விகற்பமாயினும் ஒவ்வோரடியிலும் ஒரூஉ எதுகை அமைந்து வருவனவும்

ஆகிய வெண்பாக்கள் இன்னிசை வெண்பாக்கள்.

1\. இம்மை பயக்குமா லீயக் குறைவின்றால்
தம்மை விளக்குமாற் றூமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து.

இது தனிச்சொல் யாதுமின்றி ஒருவிகற்பத்தால் வந்த இன்னிசைவெண்பா.

செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டோர்
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.

இது, முதல் மூன்றடிகளும் ஓர்விகற்பமாயும், நான்காமடி ஓர்விகற்பமாயும் இருவிகற்பமாய்த் தனிச்சொல் இன்றி வந்த இன்னிசைவெண்பா.

இவ்வுலகத் தின்பமுவர்த் தெஞ்ஞான்றும் பூம
னவ்வுலகத் தின்பு மதுவே விருப்புற்றார் [கள்கோ
முந்நீர் வளாக முழுதுறினும் வாய்க்கொள்ளார்
உய்ந்நீர வல்லா வுரை

இது, தனிச்சொல் இன்றி, முதல் இரண்டடி ஒரு விகற்பமாயும் பின்னிரண்டடி மறுவிகற்பமாயும், இருவிகற்பத்தால் வந்த இன்னிசைவெண்பா.

மன் னுயிரே வான்பிரம மாதவனன் றென்றுரைத்தல்
பொய்கொலைகள் ளுண்டல் பொருள்வெளவ லிவ்
மின்றே சிறிய ரிடத்தன விவ்வூழிக் [வனைத்து
கடைக்காலென் செய்வார் கலா.

இது, தனிச்சொல் இன்றிப் பலவிகற்பங்களால் வந்த இன்னிசைவெண்பா.

2\. உறுபுன றந்துல கூட்டி யறமிடத்துங்
கல்லூற் றுழியூறு மாறேபோற்—செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணுஞ் சிலர்க்
செய்வர் செயற்பா லவை. [காற்றிச்

இது, இரண்டாமடியில் தனிச்சொல் பெற்றிருப்பினும் பலவிகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

3\. காதன் மகளிர் கலக்கக் கலக்குண்டு
பேதுற்றூர் நெஞ்சம் பிழைத்தகன்றூர் நன்
[னெஞ்சும்
போதம் படரும் புலியூரே—தாதுண்டு
வண்டுறங்கு நீள்சடையான் வைப்பு.

இது, மூன்றுமடியில் தனிச்சொல் பெற்று இரு விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

4\. காம ருயிர்செகுக்குங் கண்ணென்றே-காமருசீர்
மாதர் நலனழிக்குங் கண்ணென்றே—மாதருக்
கின்னு விரவொழிக்குங் கண்ணென்றே—யிந்
தன்னே ரிலாதான் றனக்கு. [நிலத்தில்

இது, அடிதோறும் ஒரூஉ எதுகையாய்த் தனிச்சொல் பெற்றுப் பலவிகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[616-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

உணர்வு

ஒரு மாம்பழத்தைக் காண்கின்றேன். மஞ்சள் நிற ஒளி என் கண்ணைத் தாக்குகின்றது. கண்ணரம்பு கிளர்ச்சியுறுகின்றது. முன்மூளையில் உள்ள கட்புல எல்லையிலே போய் இந்தக் கண்ணரம்பின் கிளர்ச்சி முடிகின்றது. அப்போது அப்பழம் புலனாகின்றது. ஆனால், அந்தநிலையில் அதனை மாம்பழம் என்று நான் உணரவில்லை. மஞ்சட் பிழம்பாகவே அது விளங்குகிறது. கட்புல எல்லையிலிருந்து அக்கிளர்ச்சியானது பரவிச்சென்று, அவ்வெல்லையைச்சுற்றியுள்ள இணைப்பு எல்லைகளை அடைகினறது. அப்போதுதான் அம்மஞ்சட்பிழம்பு மாம்பழத்தைக் குறிக்கின்றதென உணர்கின்றேன். இவ்விணைப்பெல்லை கெட்டுப்போய் இருக்குமானால் மஞ்சட்பிழம்பு புலனாகும்; அது மாம்பழம் என்ற உணர்வு எழுவதில்லை. இணைப்பெல்லை கெட்டுநிற்கும் நோயாளிகள் இந்த நிலையில்தான் இருக்கிறார்கள்.

உணர்வாவது செயலுறும் நிலைமை எனச் சிலர் மன்றாடுகின்றனர். ஒரு சொல்லைக் கண்ணாற்கண்டவுடன் வாயால் அதைப் பலரும் சொல்கின்றனர். ஆனால், நன்றாகக் கற்றவர்கள் அவ்வாறு வாயால் சொல்லிக் காண்பதில்லை. இவர்களது வாய் வெளிப்படையாக அசையாமற் போனாலும், சிறிதளவேனும் அசையத்தான் செய்கின்றதாம். அதேபோல மாம்பழத்தைக் காண்கின்றான் ஒருவன் அதைப் பற்றப்போகின்றான். அவன் நேரேபோய்க் கைப்பற்றாவிடினும் கைப்பற்றுவதை நிகழ்த்தக்கூடியபடி நரம்புக்கிளர்ச்சிகள் பாய்கின்றன என்பர். ஆனால் உணர்வுநிலை வேறு; செயலுறு நிலை வேறு. இரண்டிற்கும் நடுவே ஒரு தடை யேற்படுமானால், செயலே எழுவதில்லை. புலன்களின் பொருளை யறிவதே உணர்வு. அவ்வாறு உணர்ந்தபின் எழுவதே செயலுறு நிலையாகும். இயக்கநரம்பு கெட்டநிலையில் சில நோயாளிகள் நாம் கூறும் சொற்களைக் கேட்கின்றனர்; அச்சொற்களின் பொருள்களையும்உணர்கின்றனர்; ஆனால் அச்சொற்களையே திருப்பிச்சொல்ல அவர்களால் முடியவில்லை. சொற்களைக் கண்டபோதோ கேட்டபோதோ அச்சொற்களைத் திருப்பிச்சொல்வதே இவர்கள் கொள்கைப்படி செயலுறு நிலையாகும். அச்செயலுறு நிலை எழாதபோதும் அந்த நோயாளிகள் அச்சொற்களின் பொருளை யுணர்கின்றனர். எனவே உணர்வுநிலை வேறு; செயலுறு நிலை வேறு, என நாம் கூறியது உறுதிப்படுகின்றது.

தொலைவிலிருந்து கம்பிவழியாகத் தட்டிப்பேசும்போது, அதைக்கேட்பவன் கட்கட்என்ற ஒலிகளையே செவியுறுகின்றான். பிறகு அவ்வொலிகள் எந்தச்சொற்களைக் குறிக்கின்றன என அவற்றின்பொருளை உணர்கின்றான். அவ்வாறு உணர்ந்தபிறகுதான் யாது செய்ய வேண்டும் என எண்ணிப்பார்க்கின்றான். பின்னர்த் தனது வேலையாட்களை அழைத்துச் செய்தியை எவருக்கு அனுப்பவேண்டுமோ அவருக்கு அனுப்புகின்றான். அவ்வாறே பொருளைக் காணும்போதும் கேட்கும்போதும் முகரும்போதும், சுவைக்கும்போதும், தொடும்போதும் முதலில் புலன் எழுகின்றது. புலன்கள் எல்லாம் பொருளைக்குறிக்கும் அடையாளங்களே என முன்னரே கண்டோம். மேற்சொன்ன "கட் கட்" என்ற ஒலிகளைப்போன்ற அறிகுறிகளே இப்புலன்கள்; இவற்றின் பொருளையறிவதே உணர்வாகும். பின்னர் யாதுசெய்வதென எண்ணிப் பொருத்தமுறுகின்றோம். பிறகுசெயல் எழுகின்றது. புலனிலை, உணர்வுநிலை, செயலுறுநிலை செயனிலை, என்ற நான்கும் ஒன்றின்பின் ஒன்றாக எழுகின்றன. இவை விரைந்தெழுவதால் இவையனைத்தும் ஒரே நிலைநின்ற மயக்கவுணர்ச்சி உண்டாகின்றது. தடை யேதேனும் எழுந்தபோதுதான் இந்நிலைகளின் வேற்றுமை விளங்குகிறது. கண்ணிற்குத் தோற்றும் ஒரு பிழம்பைக் கருத்தாகப் பாராமற்போனால் புலன்மட்டும் எழுமேயன்றி உணர்வு எழுவதில்லை. உணர்வு தடைப்படுகின்றது. நான் தெருவழியே நடந்துசெல்லும்போது ஒருவன் என்மீது வந்து வீழ்கின்றான். நான் வானத்தில் பறக்கும் வான்தேரைப் பார்த்து வியந்துநிற்கின்றேன். அதனால் எதிரி வந்து விழுந்த ஊற்றுப்புலன் மட்டுமே என்பால் எழுகின்றது. யார் வீழ்ந்தது எவ்வாறு வீழ்ந்தார் என்பனவற்றை யான் உணரவில்லை. வான்தேரைக் கருத்தாகப் பார்த்துக்கொண்டிராத மற்றொருபொழுது, அவ்வாறே வேறொருவர் என்மேல் வீழ்கின்றார். உடனே சினங்கொண்டு, அவரைப் பிடித்து அப்புறம் தள்ளிவிடுகின்றேன். இங்கு உணர்வும் செயலும் ஒன்றாக எழுவதுபோலத் தோன்றலாம். ஆனால், அவர் வண்டிக்குள் அகப்படும் நிலையில் என்மேல் வீழ்ந்தார் என உணர்கின்றேன். பிடித்துத் தள்ள உந்திய எனது கையைப் பின்னுக்கு வாங்கிக்கொண்டு சினந்தணிந்து நிற்கின்றேன். இப்போது எனது உணர்வு செயலாக மாறவில்லை. ஆனால் அவரைப் பிடித்துத் தள்ளக் கையை இறுகவைத்தேன். ஆதலின் செயலுறு நிலையில் நிற்கிறேன். செயலுக்கும் நிலைக்கும் செயனிலைக்கும் இடையே தடையெழுந்தது என்க. இவ்வாறு தடை எங்கேனும் எழுவதால், இந்நிலைகள் வெவ்வேறாக இருத்தல் விளங்குகின்றதன்றோ? செயல் எழுந்தபிறகும் அரைகுறையாக அதனை நிறுத்திக்கொள்கின்றோம் அன்றோ. நான் பிடித்துத் தள்ளச்சென்று, சிறிது தள்ளியதும் அவர் தனது வருத்தத்தைத் தெரிவிப்பாரானால், அதோடு அவரை விட்டுவிடுவேனன்றோ?

முதலில் எழும் உணர்வுக்கும், பழக்கத்தால் எழும் உணர்வுக்கும் வேற்றுமையுண்டு. புதுவுணர்வோ பல புலன்களும் எழுந்தபின்னே எழுகின்றது; பழக்கவுணர்வோ, யாதேனும் ஒருபுலன் எழுந்ததும் எழுகின்றது. ஒருகுழந்தைக்கு நாயின் உணர்வு புதிதாகஎழும்போது, அக்குழவி அந்நாயின் வடிவத்தையும் நிறத்தையும் காண்கிறது; நாய் குரைத்தலைக் காதால் கேட்கிறது. செவிப்புலனும் கட்புலனும் ஒன்றாயியைந்து நாய் என்ற உணர்வை எழுப்புகின்றது. அதன் பின்னர் அக்குழவி, குரைத்தலைக்கேட்டதும் நாயைக் கண்ணால் காணாதபோதும் நாய் என்று உணர்கின்றது. நாயைக் கண்ணாற்கண்டு அதன் ஒலியைக் கேளாதபோதும் நாய்என்று உணர்கின்றது. ஈதேபழக்கவுணர்வாகும்.

நாய் குரைத்தலைக் கேட்ட குழவியின் மனதில் நாயின் வடிவமும் எழுகின்றது. மாம்பழத்தின் உருவத்தைக்கண்டதும்பழக்கத்தால் அதன் சுவை மணம் வழவழப்பான ஊற்றறிவு முதலியன நினைவிற்கு வருகின்றன. உருவமும் சுவைமுதலியனவும் இயைந்து மாம்பழம் என்ற உணர்வுத்தோற்றம் (Percept) தோன்றுகிறது. இவ்வாறு ஒற்றித்து உணர்ந்த பின்னர் மாம்பழம் என்ற சொல்லைக் கேட்டவுடன் மாம்பழம், புலனாகாதபோதும், அவ் வுணர்வுப்பொருள் நினைவிற்கு வருகிறது. [எண்ணப்படுவதை எண்ணம் என வழங்குதல்போல உணர்வால் உள்ளே தோன்றும் பொருளை உணர்வு அல்லது உணர்வம் என வழங்குவோம்]. உணர்வமாய் இருந்தது எண்ணமாய் விட்டது.

நாயை நேரே காணும் குழவிக்கு நாயின்வடிவம் கட்புலனாகிறது. அதன் ஒலி முதலியன கருத்துப்புலனாகின்றன. [காட்சிப்பொருள் கருத்துப்பொருள் என்ற வேறுபாட்டைப்போலக் காட்சிப்புலன் கருத்துப்புலன் என்ற வேறுபாட்டையும் கையாள்வது பயனுடையதேயாம். ஐம்பொறிகளுக்கும் புலனாவது காட்சிப்புலனாகும்; புலப்பொருள் இல்லாதபோதும் அது நினைவிற்கு வருமானால், அதனைக்கருத்துப்புலன் என வழங்குவோம்.] அந்தக் குழந்தையானது நாய் குரைத்தலை மனக்காதால் கேட்கிறது. மனக்கண்ணால் பார்ப்பதனை நாமனைவரும் அறிவோம் அன்றோ? தொலைவில் உள்ள பொருள்களைக் கருத்துப்புலன் வழியாக எண்ணுவதே இங்குக் குறிக்கப்படுகின்றது. சுவை மணம் ஒலி முதலியவற்றையும் கருத்துப்புலனால் அறிந்து காண்கின்றனர். காட்சிப்புலன்களைப் பற்றிப் பேசியபோது, அவை தனித்தியங்குவன அல்ல என்றும், உணர்வாக விளங்கியபோது அதனை வேறுபடுத்தி ஆராய்ந்தபோதுதான் அவற்றின் தனிநிலை விளங்குகின்றது என்றும் எடுத்துக்காட்டினோம். அவ்வாறே இக் கருத்துப் புலன்களும், தனித்தனி நிற்பனவல்ல. துய்த்துணர்வில் ஒன்றாக இயைந்துவிடுகின்றன. பின்னர் அவற்றைச் செயற்கையால் பிரித்து ஆராயும்போதுதான் தனித்தனியே காணப்படுகின்றன.

காட்சிப்புலன் தெளிவாக இருப்பதுபோலக் கருத்துப்புலன் தெளிவாக இருப்பதில்லை. இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமையாது? ஒருவனுக்கு ஒருவகையான காட்சிப்புலன் எப்பொழுதும் எழுந்ததில்லையானால், அவன் அதனைக் கருத்துப் புலனால் உணர்வதும் இல்லை. பிறவிக்குருடன் நிறத்தைக் கனவிலும் காண முடியாது. ஆனால் நிறங்களைக் கண்டு களித்தவன், பின்னர் ஒருகாலத்தில் கண்ணையிழந்தாலும், நிறங்களைக் கனவில் காண்கிறான்; கருத்துப்புலனாக அவை எழுகின்றன. எனவே கருத்துப் புலன்கள், நமது பொறிகளின் இயக்கத்தால் எழுவன அல்ல. ஆனால், நமது முன்மூளையில் உள்ள புலவெல்லை கெட்டுவிடுமானால் பொறிகள் கெடாமல் இருந்தாலும் காட்சிப்புலனும் எழுவதில்லை, கருத்துப் புலனும் எழுவதில்லை. காட்சிப்புலன் எழுவதற்குப் புலவெல்லையில் ஓர் இயக்கம் உண்டாவதுபோலக் கருத்துப்புலன் எழுவதற்கும், புலவெல்லையின் இயக்கம் எழுகின்றது. அவ்வாறானால் காட்சிப்புலனும் கருத்துப்புலனும் ஓரேயிடத்தினின்றுமா எழுகின்றன? காட்சிப்புலன்கள் இரண்டும் ஒன்றாய் எழுமானால் அவ்விரண்டின் கருத்துப் புலன்களும் ஒன்றாய் எழுகின்றன. எனவே, காட்சிப்புலன்கள் எழுந்து இயைந்த அவ்விடத்தே எழுகின்ற கருத்துப்புலன்களும் இயைந்து விளங்குகின்றன. ஆனால் காட்சிப்புலனும் கருத்துப்புலனும் தெளிவுத் தன்மையால் வேறுபட்டு விளங்குவதால் இவ்விரண்டும் ஒரேவகை இயக்கத்தால் எழுகின்றன எனச் சொல்வதற்கில்லை. ஆனால் காட்சிப்புலனின் இயங்குவாயும் கருத்துப்புலனின் இயங்குவாயும் ஒன்றாகவே விளங்குகின்றன. பொறிகளிலிருந்து புலவெல்லைக்கு நரம்புக்கிளர்ச்சி பாயும்போது காட்சிப்புலன் எழுகின்றது; பொறிகளிலிருந்தன்றி முன்மூளையின் வேறிடங்களிலிருந்தும் நரம்புக்கிளர்ச்சி அதே புலவெல்லை வட்டத்தில் பாயுமானால், அப்போது அதேயிடத்தில் கருத்துப்புலன் எழுகின்றது. எனவே இவ்விரண்டும் புகுவாயால் வேறுபட்டுள்ளன.

புலக்கொள்கையினர், கருத்துப்புலன்கள் காட்சிப்புலனைச் சுற்றி வளைந்துகொண்டு அதற்கோர் பொருளைத் தருகின்றன என்று மன்றாடுகின்றனர். மாம்பழத்தைப் பார்க்கிறேன்: அதன் மணமும் சுவையும் கருத்துப்புலனாய் எழுந்து, அதன் வடிவமாம் காட்சிப்புலனைச் சுற்றி நிற்கின்றன. ஈதே அவ்வுணர்வத்தின் பொருளாகும்.

இந்தச் சொல் இதைக் குறிக்கின்றது; இப்புலன்கள் இதைச் சுட்டுகின்றன. இதற்கு இதுபொருள் எனப் பேசுகின்றோம். பொருள் என்றால் என்ன? கருத்துப்புலன்களா, காட்சிப்புலன்களின் பொருளாக விளங்குவன. பொருளை யறிவதே உணர்வாதலின் பொருள் என்றால் யாதென அறிதல் வேண்டும்.

கலைமகளந்தாதி.

[471-வது பக்கத் தொடர்ச்சி.]

துணிபொருளே நல்லுணர்வார் தூயோர் சிரத்தி
லணிபொருளே யெங்குநிறை யம்மே--பணிகின்ற
நாயேனெ னெஞ்சின் குடியிருக்க நல்லருள்செய்
வாயேயென் றேனீ வரம். 26.

வண்பொன் னியிலே மழிசைமன்னற் காய்த்தவழ்ந் [தோய்
வெண்புண்ட ரீகத்தில் வீற்றிருப்போய்-நண்ணியுனை
வேண்டினே னையடியேன் வீணனென்று நோக்காமே
ஆண்டிடுவா யீதே யருள். 27.

அருள்பூத்த கண்ணா யடித்தா மரையிற்
றெருள்பூத்த பத்தனெனச் சேர்ப்பாய்.—மருள்பூத்த
நெஞ்சுடையான் றீயோர்தம் நேயமே கொண்டுளான்
வஞ்சனெனா தென்னை மகிழ்ந்து. 28.

மன்னா இளமை மகிழ்ந்தா னடிவணங்கா
னென்னா தெனையாள்வ தெந்நாளோ—நன்மைதரு
புத்தகத்தி வெண்கமலப் போகத்தி நன்ஞான
வித்தகத்தி நீயே விரைந்து. 29.

விரைந்தோதி நாற்பா விரித்தோத வென்னைப்
பரிந்துலகு போற்றப்ப டேனே—விரிந்தகலை
வாணிச்சி பத்தி வலைச்சி பராபரைச்சி
சேணிச்சி சீர்த்தி தெரிந்து. 30.

தெரிந்தேத் திடுமன்பர் சிந்தையிலே தோன்றிப்
பரிந்தகம லன்னாப் படர்ந்து—விரைந்தோடிச்
சீர்த்திக் கொழுந்துவிடுந் தேசுடைய பூங்கொடியே
தீர்த்திடுவாய் துன்பத் தினை. 31.

துன்பம் விளைக்கின்ற துட்டரைச்சே ராவண்ணம்
இன்கருணை செய்திடுவ தெந்நாளோ-அன்பமைந்தார்
சிந்தையில்வாழ் நாமகளே தேவியே நின்னடியை
வந்திப்பேன் மேற்கருணை வைத்து. 32.

வைப்பாகு மாமணியே மாலின் மருமகளே
எய்ப்பார்க் கருந்துணையா யெய்ந்தவளே-மெய்ப்பான
தெய்வமே நாமகளே யென்றவள்தன் சீர்த்திசொலி
உய்வமே யாமும் உவந்து. 33.

உன்புகழே யென்றும் உரைத்திடுவே னல்லாமற்
றன்புறினும் வேறே துதிப்பேனே—இன்பமுறு
பாமகளே வெண்டா மரைகளே பத்தர்புகழ்
நாமகளே யுன்னடியேன் நன்கு. 34.

நன்னூல் பலவுணர்ந்து நாயடியேன் மேன்மையெய்த
அன்னே கருணைசெய லாகாதோ—தன்னேரில்
வெண்டா மரைமலரில் மேவுங் கலைமகளே
கண்டார் மொழியாய் களித்து. 35.

கமலத்தோ னுண்டு களிக்குங் கரும்பே
அமலத்தோ பென்னெஞ் சமர்வாய்-திமிரமெனும்
அஞ்ஞானம் நீங்கி யரும்பொருளைத் தேர்ந்துபெரு
மெய்ஞ்ஞான வானுக வே. 36.

வேரியமர் வெண்கமல வித்தகியே நாமகளே
சீரியர்தாம் போற்றவரு தெய்வமே—காரியங்கள்
யாவுஞ்சித் திக்கநின தின்னருளே செய்குவாய்
மேவுஞ்சித் தர்க்கமுத மே. 37.

மேவுமோ சீர்த்தி மிகுமோ கல்விப்பொருடான்
ஒவுமோ துன்ப முனைத்திடுவீர்—பாவினுல்
அன்பர் புகழ வகங்களிகூர் நாமடந்தை
தன்பதத்தைப் போற்று தவர்க்கு. 38.

தவமும் பொருளுந் தயையு முறினு
மவமே யவமே யவமே—நவையிலா
நல்லிலக்க ணங்களன்பர் நாவினின்று சொன்மடந்தை
மல்லல்பத மேத்தாத வர்க்கு. 39.

வந்தெனது நெஞ்சில் மகிழ்ந்திருக்குந் தீங்கரும்பே
செந்திருவும் போற்றும் செழுந்தேனே-பைந்
[தொடியே
பாமகளே நாமகளே பாரதியே யன்பனெனைக்
காமகளே யென்பேன் களித்து. 40.

கள்ளிருக்கும் வெள்ளைக் கமலா தனத்தியே
உள்ளிருக்கு மஞ்ஞான மோட்டுவிக்கும்-தெள்ளியளே
உன்னை யடைந்தே னொருபுகலும் புக்கிலேன்
என்னை விடாதே யினி. 41.

இனிக்குங் கற்கண்டு மிழுக்காம் மொழியாய்
பனிக்கங்குற் றூழ்கூந்தற் பாவாய்—மனக்கினிய
உன்னையடைந் தய்யுமா றோர்வழிநீ சொல்லுன்னை
யின்னே யடைந்த வெனக்கு. 42.

எனக்கா ருறவு மெனக்கா ரமுதும்
எனக்கா ருயிருமென வேய்ந்தாள்—மனக்கேதம்
நீக்குஞ் சுடர்ப்பருதி நின்மலிசீர்ப் பாமடந்தை
யாக்கும் பெரும்புகழி னுள். 43.

புன்மையோர் தம்முறவைப் போக்குப் பொருளுணர்
[நற்
றன்மையோர் தம்முறவைச் சார்வதெந்நாள்-அன்பர்ம
[னம்
நண்பொருளே வெண்கமல நாயகியே நாயடியோம்
எண்பொருளே யீங்கீ தியம்பு. 44

எப்பொருளு மையமற வென்மனத்தே தங்குவதற்
கிப்போ தருள்செய்யி லென்னுமோ-துப்பிதழாய்
மைப்பற்று கூந்தன் மயிலே கலைமடந்தா
யொப்பற்ற பாவா யுனக்கு. 45.

உன்னை வணங்காம லோவாது வாதுசெய்யும்
சின்னஞ் சிறியாரைச் சேதிக்க—வின்னருள்செய்
சங்கந் தனிற்பிறந்து சான்றோர்நா விற்றவழ்ந்தே
யெங்குந் தழைத்த பொருளே. 46.

பொருளாய் நினைத்துன்னைப் போற்றுதார் தாமோ
தெருளார் மருண்டுணர்வு தீர்வார்—பொருளமைந்த
ஐந்திலக்க ணங்களுந்த னங்களுக் கமைந்தமைப்போ
லந்தமிகக் கொள்வா யறை.

அன்று யுனைவணங்கி னையமறக் கற்கலா
மென்றூலு மென்றே யியம்புவார்—பொன்னியிலே
மாமழிசை மன்னனுக்காய் வந்தெதிர்ந்த பாமகளே
தூமருவு நூல்களுணர்ந் தோர். 48.

தோத்தரிப்பே னின்னைத் தொழுதிடுவே னெஞ்
[ஞான்றும்
நாத்தரிப்பே னெஞ்ஞான்றும் நாயடியேன்—பூத்தமலர்
வெண்டா மரைத்திருவே மேலவர்தந் நாவில்வதி
வண்டார் விழியாய் மகிழ்ந்து. 49.

மகிழ்வார்நின் னுமத்தை வாயினுற் சொல்லி
நெகிழ்வார்மன் நின்னை நினைத்தே—தகவுடையோர்
கண்ணுங் கருத்துங் கலந்த கலைமகளென்
றெண்ணு முனதன்ப ரே. 50.

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

திரு அருட்பா

வசனப்பகுதி

ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பி. ஏ. எம். எல்

அவர்களது அடக்க விலைப்பதிப்பு.

புஸ்தகவிலை, 4, அணுவும், புஸ்தக போஸ்ட் செலவிற்காக, 1 அணுவும், ஆக, 5 அணு தபால் ஸ்டாம்புகள் அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

கலாநிலயம்—புரசைபாக்கம் சென்னை.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றாகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி லிமிடெட்,

சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினுல் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழி யென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனுமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

— திருக்குறள் —

மூலமும் சொற்றுறிப் பகராதியும்

விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது. மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906.

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ்	ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு	11,51,813.
பிரீமியம் வரும்படி	30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி	7,47,608

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்
1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமனவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் யோட்டார் ஸைகில் இன்ஷூரன்ஸ்.
கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றுவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா ரூ. 2 0 0
வெளி நாடு ,, ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணு 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

குறைந்த விலை! நிறைந்த விஷயம்!
சிறந்த கதை! உயர்ந்த பதிப்பு!

பாவலர், நாவலர், மற்றி யாவரும் விரும்பும் பாச்சுவை ததும்பப் புதுமை பெற்றிலங்கும்

சுகுணவதி அல்லது
மனம்போல மாங்கலியம்

இனிமை செறிந்த தமிழ் நாவல்

ஸ்ரீமான். மாந்தை. சா. கிருஷ்ணய்யர் எழுதியது.

விலை ரூபா ஒன்றே

ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ்,
மைலாப்பூர், மதறஸ்.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோ, பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
5. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை,திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9 நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய் மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் சட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை:—இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி.—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32. மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறு கதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	8	0	பையிண்டு செய்யாதது	10	0	0
காலிகோ கில்ட்	10	0	0	காலிகோ கில்ட்	11	8	0
ஆப்லெதர் கில்ட்	10	8	0	ஆப்லெதர் கில்ட்	12	0	0

:: கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

பெண் நலன்

பெண்மக்களின் வாழ்வு எல்லாநலனுடனும் சிறந்து திகழவேண்டிய அவசியத்தை விளக்கும் ஆசையொடு, இப் 'பேண் நலன்' என்னும் ஒரு சிறு புத்தகம், தனவைசச்செல்வர் ஸ்ரீமான் வலம்புரி, ஆவி. சித. சொக்கலிங்கம் செட்டியாரால் வரையப் பட்டுளது. இதனிடை 'பெண்ணடிமை, பெண் கல்வி, பிள்ளை வளர்த்தல், பெண்களுக்கு உடற் பயிற்சி, நகையணிதல், இளமைமணம், விதவைமணம், பிள்ளைப்பேறு ஆயதலைப்புகளின் கீழ், இனிப்பெண்ணுலகத்தினிடை நடக்வேண்டிய சீர் திருத்தங்கள் இவையெனக் காட்டப் பட்டிருக்கின்றன. வலம்புரி, பொன்னமராவதி அலர்மேலு பெண்பாடசாலைத் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீமான் இராமநாத பிள்ளை அவர்கள், தந்துள முகவுரையில், சீர்திருத்தம் பல இயற்றிவைக்கும் ஆர்வத்தைஉண்டாக்கும் இந்நூலைப் படித்தவர் இதனுடைய இன்றியமையாமையும், பயனையும் அறியாதுபோகார் என்று பொருள்படப் புகழ்மொழி அளித்துளார். நல்ல காகிதத்தில் பார்வைக்கு அழகாக இப்புத்தகம் ஆக்கப்பட்டுள்ளது. விலை அணா 6. வேண்டுவோர் ஏழணா தபால் தலையனுப்பிப் பொன்னமராவதி, வலம்புரியிலிருக்கும் ஆசிரியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

***

மைசூர் மஹாராஜா இமயமலையில் உள்ள பல க்ஷேத்திரங்களையும் பார்த்துவிட்டு இப்பொழுது திரும்பிக் கொண்டிருக்கின்றார். கௌரிகுந்து என்னும் தீர்த்தம் ஒன்று அங்கு இருக்கின்றது. அங்குச் செல்வதற்கு மலை உச்சியில் 200-மைல் தூரம் கால்நடையாகவோ, அல்லது டோலியிலோ செல்லவேண்டுமாம். மஹாராஜா அங்குச் சென்று திரும்பினர். 24-ந்தேதியன்று மஹாராஜா ஹரித்துவாரம் திரும்புவார். செப்டம்பர் முதல்வாரத்தில் அவர் மைசூர் வந்து சேருவார் என்று மைசூர்ச் செய்தி கூறுகின்றது.

***

பர்னட்ஷா என்னும் அறிஞர் சென்ற ஒரு ஆண்டாக, 'நல்லவர்களாய் இருப்பதற்குமுடியாதபடி உண்மையுள்ளவர்களா யிருத்தல்' என்னும் தலைப்புடைய நாடகமொன்றை எழுதி வருகின்றனராம். அதுஇன்னும் கொஞ்சகாலத்தில் வெளிவரும்என்று தெரிகின்றது. மாந்தரைக் கட்டுப்படுத்தும் விதிவிலக்குகளைப் போக்குவிப்பதற்கென்னும் நோக்கத்துடன் இது எழுதப்படுகின்றதாம்.

சமீபத்தில் விருதுநகரில்கூடிய சுயமரியாதைமஹாநாட்டில் ஜனங்கள் மதக் கொள்கைகளை விட்டுவிடவேண்டுமென்றும், கதர் கட்டிக்கொள்ளக்கூடாதென்றும், அரசாங்கத்தார் பண்டிகைக்கென ரஜா விடுதல் கூடாதென்றும், ஜனங்களின்மனத்திலிருந்து கடவுள் நினைவு அகலவேண்டுமென்றும், சமூகக் கட்டுப்பாடுகளும், மணமுறையும் அகலவேண்டுமென்றும், கர்ப்பத்தடை வளரவேண்டுமென்றும், அதற்கான பிரசாரம் வேண்டுமென்றும் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன என்று தெரிகின்றது.

***

பாரிஸ் நகரத்தில் போக்குவரவு அதிகமானபடியினால் பூமியின்கீழ் போக்குவரவுக்குரிய சாலைகளை நிர்மாணிக்கவேண்டிப் பிரஞ்சு அரசாங்கத்தார் முயன்று வருகின்றனர் என்று பாரிஸ் செய்தி கூறுகின்றது.

***

சென்ற மூன்று ஆண்டுகளாக ருஷியாவிலிருந்து இங்கிலாந்திற்கு 1கோடியே 85லட்சத்து 50ஆயிரம் டன் கோதுமை வந்துளது என்று வியாபாரநிலையச் செய்தி கூறுகின்றது.

***

இங்கிலாந்திற்கென வருஷந்தோறும் இறக்குமதியாகும் உணவுப்பொருள் விவரம்:—

சர்க்கரை	8லட்சத்து	74ஆயிரம்டன்
கோதுமைமாவு	21லட்சத்து,	80ஆயிரம் ,,
முட்டை	73ஆயிரம்	,,
தேயிலை	50கோடிராத்தல்	,,
எண்ணெய்	1லட்சத்து	20ஆயிரம்டன்

***

உலகத்திலுள்ள பலநாடுகளின் வரும்படியில், இராணுவச் செலவு வருமாறு:—

இந்தியா	100க்கு,	45 29	ராணுவச்செலவு.
ஜப்பான்	,,	36·57	,,
இத்தாலி	,,	19·75	,,
பிரான்ஸ்	,,	19·75	,,
அமெரிக்கா	,,	16·49	,,
இங்கிலாந்து	,,	14·75	,,
ஜெர்மனி	,,	7·16	,,

உலக நாடுகளில்இந்தியாவில்தான் இராணுவத்திற்கென அதிகம் செலவழிக்கப்படுகின்றது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாமுதீர்
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
தித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலகதைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்
டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.
"நஞ்சன்கூடுபல்பொடி"
பிரான்சு: மதுரை. காஞ்சீபுரம்.

188930
N31'4'32

KALANILAYAM.
REG. NO., M 2324.

—:வைத்திய ரத்ன:—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதரூஸ்.

கேட்லாக் இனும்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ.,
புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

- சோப்புகளில் ராஜா -

நாடறிந்தது நல்வரவேற்கப்படுவது

: சிலாக்கியமானது :

டாக்டர் டிராலியின்

- லயன் சோப் -

பார்வைக்கு உன்னதமும், உயர்தரமும் ஆனது.
அதேபோல் உழைப்பிலும் மேலான
குணம் நிறைந்தது.

ஒரு கட்டியாவது இரு கட்டியுள்ள
பெட்டியாவது வாங்குக.

- - எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும் - -

Sole Agent:—
A. V. R. A. ADYCAPPA CHETTY,
52, Bunder Street, Madras.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)